திராவிடநாடு

13—3—60 | வார வெளியீடு | விலை 16 காசு

குறை ஏன் வைத்தாய்?

—[க. பொ. இளம்வழுதி]—

சேலத்துப் பூமியிலே இரும்பு! செல்வச்
    செழிப்புதனைக் காட்டுகின்ற செந்நெல், கன்னல்!
காலத்தால் மங்காத கோலார் தங்கம்
    கடலைக்காய், கறி மிளகு, ஏலம், தந்தம்
ஓலமிடும் ஆழிதரும் ஒளிசேர் முத்து
    உடைசெய்ய நூலாகும் பஞ்சும் பெற்று
ஆலமரம் போற் பரந்த நாடே! உன்னை
    அடிமையெனப் பிறர் என்றும் குறையேன் வைத்தாய்?

புனலோடும் பொன்னி நதி! பொதியச் சாரல்!
    புகழ் வாய்ந்த முக்கடலும் உன்ம ருங்கே
கன ரகமாய்த் தொழில் வளரத் தேவை யான
    கருந்தங்கம் நெய்வேலி தந்த செல்வம்
வன வளமும் மிக்குடைய எமதரும் நாடே!
    மனவளமும் மிகப் பெற்று இந்த நாட்டில்
இனமுழக்கம் செய்தின்னல் களையா நாட்டில்
    ஏராள மக்களிலாக் குறையேன் வைத்தாய்?

பூகம்பம்

[ஏ. கலைமுகிலன்]

மொராக்கோ, 20-2-60.

"அன்புள்ள அல்லிக்கு,"

ஆண்டுகள் பல கடந்த பின்னே இன்றுதான் உனக்கு மடல் தீட்டுகிறேன். என்னைப் பிரிந்த நீ எப்படியெப்படியெல்லாம் இன்னல் அடைந்திருப்பாய்? என்னென்ன துன்பங்களையெல்லாம் தாங்கிக் கொண்டிருப்பாய்? என்று எண்ணிப் பார்க்கின்றேன்; அந்த நேரத்தில் என் உள்ளம். "வஞ்சகன்! துரோகி! நஞ்சினும் கொடியவன்!" என்று என்னையே சுட்டிக்காட்டுகிறது.

உன்னைப் பிரிந்து, நம் அன்புச் செல்வங்கள் செந்தாமரை, வெற்றி வீரன் இருவரையும் பிரிந்து வந்து மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன!

மழலை மொழிபேசி மகிழ்ச்சியிலே நம்மை மூழ்கடித்த அந்த அன்புச் செல்வங்களையும், எத்தனையோ துன்பங்களுக்கிடையேயும், இன் சொல்லும், இன்முகமும் காட்டி, என் சோர்வு நீக்கி, ஆக்கத்திற்கு ஊக்குமூட்டிவந்த என் அன்புத் தெய்வம் உன்னையும்விட்டுப்பிரியக் காரணம், வறுமைதானே?

அந்த வறுமையை இப்போது நினைத்தாலும் என் நெஞ்சம் நடுங்குகிறது! என் உள்ளத்தில் ஒரு வித இருள் படர்கிறது! ஐயோ! அந்தக் கொடிய வறுமையை எப்படித்தான் தாங்கிக்கொண்டு வாழ்கிருயோ?

வாழவழியற்று, வறுமையிலே வதைபட்டு, வாழும் வழிதேடி ஓடி வந்தேன்மத்தியதரைக்கடல் ஓரம்- அகதீர்!

வாழ்வுதேடிச் சென்ற எனக்கு வாழ்வளித்து, என்னை செல்வந்தனுக்கியது, அகதிர்! அந்த நிலையிலேதான் உன்னையும், நம் அன்புச் செல்வங்களையும் காணத் துடிதுடித்துக்கொண்டிருக்கிறேன்.

அகதீர் என்னைச் செல்வந்தனுக்கியது; சிறப்புக்குரியவனுக்கியது! எனினும், என்னைப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்த தென்னகத்தை—இன்பத் தமிழகத்தை என்னல் மறக்கமுடியவே இல்லை! ஆயிரம் அகதீர்கள் ஆனாலும் நம் திருநாட்டுக் கலைவளம், கனிவளம், இயற்கைவளம் ஆகியவற்றிற்கு ஈடு இணை ஆக முடியாது!

எனவேதான், இத்துடன் அகதிர் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, உன்னையும், நம் அன்புச் செல்வங்களையும், அருமைத் தமிழ் நாட்டையும்விட்டுப் பிரியாது தமிழகத்திலேயே தங்கி வாழ நினைத்துக் கொண்டிருக்கிறேன். இந்த எண்ணத்தோடு 5—3—60 அன்று அகதிரிலிருந்து புறப்படுகிறேன்.

இங்கனம்,
உன் அன்பு
"கதிரவன்"

கடிதத்தை படித்து முடித்த அல்லி அடைந்த இன்பத்தை அளவிட்டுக் கூறவோ, வார்த்தைகளால் வர்ணித்துக் காட்டவோ இயலாது! குருடன் கண்பார்வை பெற்றுவிட்டால் அவன் அடைகின்ற இன்பத்திற்கு அளவுண்டோ? கண்ணிழந்தவள் நிலையிலே, அன்புக் கொழுநரைப்பற்றி அறியாத அல்லி மீண்டும் கொழுநரைப்பற்றி அறிந்ததால் இன்பமடைந்தாள் என்ருல் வியத்தற்குண்டோ?

இன்பத்தினைப்பிலே மூழ்கியிருந்த அல்லியின் கண்ணெதிரே எதிர்காலத்தைப் பற்றிய நினைவுகள் தோன்றி மறைய ஆரம்பித்தன.

"அம்மா! பசி தாளவில்லை. இன்றைக்காவது..." என்று கேட்டுக் கொண்டே தன்னை கட்டியணைத்துக் கதறும் பச்சிளங் குழந்தைகளை வாரி அணைத்து தகரக்குவளை நிறைய நீர்மொண்டுதந்து, வேதனையால் வெந்து நொந்து கண்ணீரைக் காணிக்கையாக்க, "எம்மா! அழறீங்க! எங்களுக்கு ஒன்றும் வேண்டாமம்மா! நீங்க அழாதீங்க!" என்று கெஞ்சும் குழந்தைகளின் கொஞ்சுமொழியும், மாறுகின்றன்; வெள்ளிக் கிண்ணத்தில் இட்ட பாற்சோறும், பருப்பு நெய்யும் ஊட்டி, ஊஞ்சலில் அமர்த்தி ஆட்டி மகிழ்கின்ற காட்சியும்—

காலை நீட்டிப் படுக்க முடியாது முடக்கிக்கொண்டு, குழந்தைகளைப் பக்கத்திற்கு ஒன்ருக அணைத்துக் கொண்டு உறங்கும்போது, கொட்டும் மழை குடிசையினுள்ளே கொட்ட, ஏதும் செய்ய இயலா நிலையில் தன் செல்வங்களைத் தன் ஆடையால் மூடிக்காத்த நிலைமாறி, ஏழடுக்கு மாளிகையும், காற்றும் நுழையாத அறைகளையும் கொண்ட இல்லத்தே கண்ணுறங்கும் காட்சியும் தோன்றி மறைந்தன.

இப்படி எவ்வளவு நேரம் நினைவு அலைகளுக்கு இடையே நீந்திக் கொண்டிருந்தாளோ தெரியாது. "அம்மா!" என்ற குரல் கேட்ட பின்னர்தான் மீண்டும் சுய நினைவுக்கு வந்தாள். கொழுநர் வரப் போகிருர் என்ற நினைவில் தன் குழந்தைகளை வாரி அணைத்து முத்தமிட்டு "உங்கள் அப்பா வரப் போகிருரடா" என்ருள்.

இரண்டு தினங்கள் கழிந்தன. அகதிர் நகரில் பூகம்பம்! பல்லாயிரக்கணக்கானவர்கள் பலி! பலரைக் காணவில்லை! வீடு வாசல்கள், மாடமாளிகைகள் அனைத்தும் இடிந்து தூள்தூளாயின! அழகு மிக்க அகதீர்நகரமே நாசம்! பிரபல தமிழ்நாட்டு ஓவியரும், புரட்சி எழுத்தாளரும் ஆன கதிரவன் அவர்களைக் காணவில்லை! என்ன ஆனர் என்று தெரியவில்லை!" என்ற செய்திகளைக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருந்தன, தினசரி ஏடுகளும், வார, மாத இதழ்களும்.

பத்திரிகைச் செய்திகளைப் படித்தும், படித்தவர் வாயிலாகக் கேட்டும் திடுக்கிட்டாள் அல்லி!

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழன் பண்பாடு?!

ர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (13-3-60) தனிப் பிரதி 16-காசு | இதழ் 35

"தமிழன் பண்பாடு தரணி எங்கும் பரவவேண்டும். அதற்கேற்ற முறையில், வெளிநாடுகளுக்குச் செல்லும் தமிழ் மக்கள் நடந்துகொள்ளவேண்டும்." இது நமது பொருளமைச்சர் சுப்பிரமணியமவர்களின் பொன்னுன உபதேசம். மலேயா செல்லும் தமிழ்ப் புலவர் ஒருவரின் வழியனுப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதுதான் இவ்விதம் குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.

பொன்னுன உப்தேசம் — பொருளுள்ள உப்தேசம், — பொருத்தமான உபதேசம்! அதிகம் கூறுவானேன்? தமிழனுக்குப் பெருமையும், புகழும், சிறப்பும், செல்வாக்கும், உயர்வும் தரக்கூடிய உன்னதமான உபதேசந்தான். இதில் சிறிதும் தவறில்லை. தமிழன் பண்பாடு தரணி எங்கும் பரவவேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கக் காரணமில்லை.

ஆனல், இப்படிக் கூறுபவர்கள் யார்? ஏன் கூறுகிறுர்கள்? எப்போது கூறுகிறுர்கள்? என்பனவற்றை ஆராய்ந்து பார்க்கும்போதுதான், அப்படிக் கூறுபவர்களுக்கு உண்மையாகவே தமிழன் பண்பாட்டில்—அது ஊரெங்கும், நாடெங்கும், உலகெங்கும் பரவவேண்டும்—புகழ் ஓங்கவேண்டும் என்பதில் அக்கறையும் ஆர்வமும் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கவேண்டியவர்களாகிறோம்.

தமிழன் பண்பாடு காலத்தால் முந்தியது. இது எந்த ஒரு இனத்துக்கும் இல்லாத—ஏற்படாத ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. வரலாறு கூறும் உண்மை இது.

என்ருலும், இப்போது, இதன் அவசியம்பற்றிப் பேசப்படும் நிலமை ஏற்பட்டுள்ளது.

ஏன்?

ஏன் இந்த நிலை ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? எவரால் ஏற்பட்டது? விளக்கம் வேண்டும்.

நமது மதிப்பிற்குரிய அறிவமைச்சர் இப்போது இதனைக்கூற முன் வந்திருக்கிருர் என்ருல், அதனை ஒரு ஏனே, தானேப்பேச்சு என்று எண்ணி வாளா இருந்துவிடமுடியாது.

நமது பகுதியின் அறிவுத்துறைக்கும் பணத்துறைக்கும் அதிபராக இருப்பவரே இதுபற்றி இப்போது கூறுகிருர் என்ருல், இதுபற்றி எவரும் எண்ணிப் பார்க்காமல் இருக்கமுடியாது.

பல இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் இலங்கை மலேயா, பர்மா, போன்ற வெளிநாடுகளில் குடியேறி வாழ்கிருர்கள். இல்லை, இல்லை! கூலிவேலை செய்தாவது பிழைக்கலாமா என்ற நிலை, பண்பாடுமிக்க தமிழனுக்கு ஏற்பட்டதால் அங்கெல்லாம் போய் வாழ்கிருர்கள்! வாழ்கிருர்களா? **'வாழ்கிருர்கள்'** என்ற சொல் உண்மையில் அவர்களுக்குப் பொருத்தமாக அமைகிறதா? என்று பார்த்தால், அவர்கள் வாழவில்லை—வதைபடுகிருர்கள்—வாய்க்கும் வயிற்றுக்கும் கிட்டாது வேதனைப்படுகிருர்கள்—இடுப்புக்குத் துணி இல்லாமல் இன்னல்படுகிருர்கள்—என்று கூறுவதுதான் சாலப் பொருத்தமாகும்.

இந்தப் பரிதாபத்திற்குரிய நிலையில் இருந்து இடர்ப்படும் தமிழ் மக்கள், தங்கள் பண்டைய பண்பாட்டை அங்கெல்லாம் பரப்புவது ஒருபுறமிருக்கட்டும், அதுபற்றி எண்ணிப்பார்க்கவாவது அவர்களுக்கு நேரமுண்டா? நினைவுதான் எழுமா? என்பதனை நமது நிதியமைச்சர் எண்ணிப்பார்த்திருப்பாராஎன்று நம்பத் தயங்கவேண்டியிருக்கிறது.

இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வதியும் தமிழ் மக்கள் எல்லோரும் தலைசிறந்த வாழ்வில் திளைத்திருப்பதாக எண்ணிக்கொள்பவர்கள்தான் இவ்விதம் முன்பின் யோசனையின்றிப் பேசுவரேயன்றி, அவர்களின் உண்மை நிலையை அறிந்த எவரும் தமிழன் பண்பாட்டை இவர்கள் எல்லோரும் பரப்பவேண்டும் என்று பேசமாட்டார்கள்.

ஆனல், நமது அமைச்சர் பேசுகிருர். பேசுகிருர் என்ருல், விளக்கமும் தெளிவும் அற்ற நிலையில் நின்று பேசுகிருர் என்று எவரும் எண்ணிவிட வேண்டாம்.

வெளிநாடுகளில் உள்ள தமிழ்ப்பெரு மக்கள் எந்த அளவுக்கு வாழ்வோடு போராடிக்கொண்டிருக்கிருர்கள் என்பது அவருக்கு நன்ருகத் தெரியும். அவரும் ஒரு தமிழ்ப் பெருங்குடி மகன்தானே! அவரறிவார் அனைத்தும். என்ருலும் பேசுகிருர் என்ருல்—தமிழன் பண்பாடு பரப்ப வெளிநாடுகளில் உள்ள ஒவ்வொரு தமிழனும் முயலவேண்டுமென்று பேசுகிருர் என்ருல், அது அவர்—ஒரு தமிழன் பேசுகிருன் என்று பொருள் அல்ல.

அவர் அமர்ந்திருக்கும் பீடம் அவ்விதம் அவரைப் பேசச்செய்கிறது.

வெளிநாடுகளில் பிழைப்புக்காகச் சென்றிருக்கும் தமிழ் மக்கள் அடையும் அளவற்ற துன்பங்களை— அவை களையப்படவேண்டுமென்ற குரலுக்குச் செவிசாய்த்து, அவைதம்மை எல்லாம் களைந்தெறியும் பொறுப்பில் வீற்றிருக்கும் ஒரு அமைச்சர், எடுத்துக்

காட்டி, "பாருங்கள் நமது உடன்பிறந்தோராம் தமிழ்ப்பெருமக்கள்; ஊர் ஊருக்கும் சென்று உழைக்கும் உடைக்கும் ஊசலாடுவதை" என்று பேசுவார்! 'இவர்கள் எப்படித் தமிழர் பண்பாட்டைப் பரப்புவார்கள்" என்றுகேட்பார். அப்படிக் கேட்டால் கேலிக்குரியவராக மாட்டாரா?

எனவே, புண்ணுக்குப் புனுகு போடுகிருர்.

வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள், திருமணமாகி மாமியார் வீட்டுக்குச் சென்ற பெண் மாதிரி பக்குவமாகப் பழகவேண்டும்—தொடர்புகொள்ள வேண்டுமென்று வேறு அரசியல் உபதேசமும் செய்கிருர்.

பக்குவமாகப் பழகி வாழவேண்டிய பரிதாபத்திற்குரிய தமிழ் மக்கள் எங்ஙனம் தங்கள் பண்பாட்டை எடுத்துக் கூறிப் பரப்பமுடியும்? அப்படிப் பரப்ப முயன்ருலும், அந்த அரை வயிறு கால்வயிறுக் கஞ்சிகளின் பேச்சை யார் கேட்பர்? இதெல்லாம் நமது கிதியமைச்சருக்குத் தெரியாததல்ல. தெரிந்தும் கூறுகிருர். இப்படிக் கூறவாவது ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்ற பூரிப்பால் கூறுகிருர் என்றுதான நாம் எண்ண முடிகிறதோடு, தமிழின பண்பாடு பரப்ப வழி—வாய்ப்பு இதுதாஞ என்று சிந்தித்து சிந்தாகூலப்படவும் வேண்டியிருக்கிறது. அந்தோ! தமிழ்ப் பண்பாடே இதுவா உன்நிலை? இந்த நிலைக்கா நீ தள்ளப்பட்டுவிட்டாய்?

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

'கதிரவன் அவர்களைக் காணவில்லை!'

'என்ன ஆனர் என்று தெரியவில்லை!' என்ற வரிகள் அவளை மீளாத் துயரில் ஆழ்த்தியது! வெண்ணெய்திரண்டு வரும்போது தாழி உடைந்தது போலாயிற்று அவள் இதயம்!

கண்டகனவுகளும், கட்டிய மனக் கோட்டைகளும் இடிந்து தூள் தூளாயின! கண்கள் குளமாயின! இன்பத்தில் மிதந்த உள்ளம் துன்பத்துள் அமிழ்ந்தது! அந்தத் துன்ப வெள்ளம், அவளது வாழ்வையே முறியடித்து, உடலிலிருந்து உயிரைப் பிரித்தது!

ஆம்! கணவனைப்பற்றிப் பத்திரிகைகள் தந்த செய்தியைக் கண்டு மனம் இடிந்து உயிர் துறந்துவிட்டாள்!

அவளது வெற்றுடலைத் தொட்டுப் புரட்டி "அம்மா! ஐயோ!! அம்மா!!!" என்று கதறித் துடித்துக் கொண்டிருந்தன ஏழு வயதுக்கூட அடையாத இரண்டு குழந்தைகளும்! பசியின் கொடுமையும், பதறிய பதநிலையும் அவர்களையும் நிலைவிழக்க வைத்தன!

இருளைக் கிழித்துக்கொண்டு வந்த பிளஷர், ஊரின் கிழக்கோடியில் இருந்த ஓலைக் குடிசையின எதிரே நின்றது.

அதிலிருந்து இறங்கிய கதிரவன் அவசர அவசரமாக வீட்டினுள் ஓடிஞன். ஓடிய அவனது கால்களில் ஏதோ தட்டவே கைகளால் தடவிஞன்!

ஓவென்று கதறிவிட்டான்!

காரோட்டி கைவிளக்கு ஒன்றை எடுத்துக்கொண்டு குடிசையினுள் வந்தான். அங்கே அவர்கள் கண்ட காட்சி!... மூன்று உயிர்கள் வெற்றுடலாகக் கிடந்தன!

கதிரவனின் இதயத்தே பெரும் பூகம்பம்! ஆம். அகதீர் நகரத்துப் பூகம்பத்தைவிடப் பெரியது! கொடியது! தேம்பிய உள்ளத்தோடு, அந்த இருளில் எங்கோ நடந்துகொண்டிருந்தான்!

அகதீர் நகரத்தில் ஓர் பூகம்பம்! அது அகதீரையே அழித்தது! கதிரவனின் உள்ளத்தே பூகம்பம்! அது அவன் வாழ்வையே வீழ்த்தியது!

O

அறிக்கை:—

"திராவிட நாடு"

1.	வெளியாகும் இடம்	...	95, திருக்கச்சி நம்பி தெரு, காஞ்சிபுரம்.
2.	வெளியிடும் நாட்கள்	...	வாரம் ஒருமுறை
3.	அச்சிடுவோரின் பெயர்	...	சி. என். அண்ணுதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	95, திருக்கச்சி நம்பி தெரு, காஞ்சிபுரம்.
4.	வெளியிடுவோரின் பெயர்	...	சி. என். அண்ணுதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	95, திருக்கச்சி நம்பி தெரு, காஞ்சிபுரம்.
5.	ஆசிரியரின் பெயர்	...	சி. என். அண்ணுதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	95, திருக்கச்சி நம்பி தெரு, காஞ்சிபுரம்.
6.	பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களும் முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சத விகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரியும்.		சி. என். அண்ணுதுரை 95, திருக்கச்சி நம்பி தெரு, காஞ்சிபுரம்.

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்த மட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று சி என். அண்ணுதுரையாகிய நான் அறிவிக்கிறேன்.

13—3—60

(ஒப்பம்) சி. என். அண்ணுதுரை,
வெளியிடுவோர்.

மத்திய கிழக்கில் குழப்பம்!

○○○○○○○

இஸ்ரேல்-சிரியா மோதல்!

○○○

—[அன்பு]—

○

இரண்டாவது உலகப் பெரும் போரின்போது கூடிக் கலந்த போர் மேகங்கள் இன்னும் முற்றிலும் மறைந்ததாகக் காணோம். அன்றிலிருந்து இதுவரை எங்காவது சிறு சிறு இடங்களைச் சூழ்ந்துகொண்டு சிறிய அளவிலாவது "ஆற்றலை"க் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. இது போன்ற ஒரு 'ஆற்றலை' இப்போது மத்திய கிழக்கு அனுபவித்து வருகிறது. 1956க்கு பிறகு 3 ஆண்டுகளுக்கு மேலான இடைவெளிக்குப்பின் மீண்டும் மத்திய கிழக்கில் இஸ்ரேல்—ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகள் எல்லையில் படை மோதுதல்கள் பெரும் அளவில் சென்ற திங்கள் ஆரம்ப முதல் நிகழ்ந்து வருகிறது. இஸ்ரேல்—சிரியா எல்லைகளில் இன்று போர் மேகங்கள் சூழ்ந்துகொண்டு "மழை"யையும் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றன.

இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குமிடையே நீண்ட நாளாகவே போர் மனப்பான்மை நிலவி வருகிறது. "இதுபோன்ற ஒரு போர் எண்ணம் எங்களிடையே நிலவி வருவது உண்மை" என்பதை ஐக்கிய அரபுக் குடியரசே ஒப்புகிறது. மத்திய கிழக்கில் இஸ்ரேல் ஒரு **வேண்டாத—விரும்பாத** நாடு என்பது நாசரின் தலைமையின் கீழ் இயங்கும் அரபுக் குடியரசின் எண்ணம். இஸ்ரேல் 'மேற்கத்திய கூட்டுறவு நாடுகளால் **உண்டாக்கப்பட்ட** ஒரு தேவையில்லாத நாடு என்பது உலகின் மற்றைய சில பகுதியிலிருப்பவர்களின் எண்ணமும் கூட. இந்த அடிப்படையில் வளர்ந்தது தான் இஸ்ரேல்—ஐ. அ. குடியரசு நாடுகளின் எதிர் மனப்பான்மை. இதன் காரணமாகத்தான் இஸ்ரேல் கப்பல்களையும், இஸ்ரேலுக்குச் செல்லும் வெளியார் கப்பல்களையும்கூட சூயஸ் கால்வாய் வழியாக அனுமதிக்க நீண்ட நாட்களாகவே மறுத்து வந்திருக்கிறது எகிப்து.

நீண்ட காலமாக நிலவி வரும் இதுபோன்ற பல சிக்கல்களோடு, இப்போது நிகழும் படை மோதுதல்களுக்குக் காரணமாக எல்லைப் பிரச்சினையும் வந்துவிட்டது. எல்லையோரக் கிராமமான ட்வாஃபிக் (Twafik) என்ற சிறு இடம்தான் தற்போது நிகழும் இராணுவ மோதுதல்களுக்குக் காரணமாக இருக்கிறது. இரு நாடுகளின் ஒப்பந்தப்படி இச்சிற்றூர் ஒரு "படைகள் களையப்பட்ட" (Demilitarised) இடம். அதுபோன்ற ஒரு இடத்தில் ஐ. அ. குடியரசின் அங்கமான சிரியா இராணுவ தளவாடம் அமைத்திருக்கிறது என்ற புகாரை எழுப்புகிறது இஸ்ரேல். படைகள் களையப்பட்ட அந்த இடத்தை மேன்மேலும் இராணுவ ஆக்கிரமிப்புச்செய்கிறது இஸ்ரேல் என்று எதிர்ப்புக் குரல் எழுப்புகிறது ஐ. அ. குடியரசு. விளைவுகள்பற்றிய உண்மை வாதங்கள் யார் பக்கம் இருக்கிறதோ இல்லையோ; ஆனால் பிரச்சினையின் மூலம் இப்போது பெரிய அளவில் இராணுவ மோதுதல்கள் நிகழ்ந்து வருகின்றன என்பதுமட்டும் உலகம் கண்டுவரும் உண்மை.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்கு இரு நாடுகளும் புகார் தொடுத்துக் கண்டனக் கடிதங்கள் அனுப்பியுள்ளன. இருநாடுகள் பற்றிய செய்கைகளுக்கும் பொதுப் படையில் வருத்தம் தெரிவித்துப் பதில் கடிதங்கள் அனுப்பியுள்ளது ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை. இந்தக் கடிதப் போக்கு வரத்துக்கிடையில் எல்லோரும் அறியும் வகையிலேயே இரு நாடுகளின் போர்த் தளவாடங்கள் எல்லையோரச் சிற்றூரை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன.

"சமாதானப் பேச்சுக்களின் மூலம் எல்லைப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டு அதன் மூலம் இராணுவ மோதுதல்களுக்கு ஒரு முடிவு கட்டலாம்" என ஒப்புக்காக வேனும் இஸ்ரேல் அழைத்திருக்கிறது ஐ. அ. குடியரசை. இது போன்ற எல்லை ஆக்கிரமிக்கு அரபுக் குடியரசு என்றும் விட்டுக் கொடுக்காது. "உங்களோடு எங்கள் தேசிய இராணுவம் பேசும்" என்ற கருத்துப்படச் சென்றகிழமை பேசியிருக்கிறார் குடியரசின் தலைவர் நாசர்.

"எல்லையோர மோதுதல்களில், ஐக்கிய அரபுக் குடியரசு மையாளும் இரஷ்ய, செக்கோஸ்லேவாகிய இராணுவத் தளவாடங்கள் சிரியாவில் காணப்படுகின்றன" என்ற தனது நீண்டகால உள் எண்ணத்தைக் குற்றப் பத்திரிகையாக்கி வாசிக்கிறது இஸ்ரேல். நாங்கள்தான் பாதுகாவலர்கள் என்று கூறிக்கொண்டு மத்திய கிழக்கில் தலையிட்டு ஐக்கிய அரபுக் குடியரசுக்கு வீணாகத் தொல்லைகள் கொடுக்காதீர்" என்று உலகின் பெரும் சக்திகளில் மூன்றான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளைப் பார்த்து, அரசியல் பார்வையாளர்கள் கூறுவதுபோல "கூரிய எதிர்ப்புக்கணை" விட்டிருக்கிறார் தலைவர் நாசர்.

எப்படியோ போர்மட்டும் இடையில் நுழையச்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. மத்திய கிழக்கில் என்று முதன் முதலாக நிரந்தரமான அமைதி நிலவப் போகிறது என்ற நாளை உலகம் மிகவும் ஆவலோடு எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் "இராணுவக்கூட்டுச் சக்திகள்" மட்டும் என்றும் எங்காவது ஒரு மூலையில் "உடனு"க்கும் "மூளை"க்கும் வேலை கொடுத்துக் கொண்டிருக்கத்தான் வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கின்றன.

அந்நிய உதவி என்ற பெயரில் மறைமுகமாகச் சில "தலை"களை (Strings), ஏற்படுத்திக்கொண்டும், தேசிய நட்புறவுகள் என்ற பெயரில் **"இராணுவ கூட்டுச் சக்தி"களை** விரும்பி, உண்டாக்கிக்கொண்டும் இருக்கிற **வரையில்** "அகில உலக அமைதி" 'அகில உலகப் படைக் குறைப்பு' என்பதெல்லாம் வெறும் சொற்சிலம்பமாகத்தான் இருந்துவரும். இரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் அண்மையில் இந்தோனேஷிய பார்லிமெண்ட் கூட்டத்தில் குறிப்பிட்டது போல, அதுவரையில், ஐக்கிய நாடுகள் சபைகூட, உலக நாடுகளிடையே அவ்வப்போது எழும் போர்களைத் தடுக்கத் **திறமையில்லாத ஒரு பயனற்ற அமைப்பாகத்தான் இருந்துவரும்.**

★

அச்சமே பேய்

—[கரந்தை கணேசன்]—

இரக்கமெனும் ஒரு பொருளிலா மரத்துப்போன மனத்தை உடையவன்போல் உலகம் இருண்டு கிடந்தாலும், அவன் மனத்திலேயும் குடும்பப் பாசம், பற்று என்கிற உணர்வுகள் இதயத்தின் ஒரு மூலையிலே ஒதுங்கி உறவாடுவதைப் போல இருண்ட அந்தக் கன்னங்கரிய இரவிலும் வானத்தின் திரையிலே பதித்து வைக்கப்பட்டிருந்த விண்மீன்கள் இருளுக்குச் சாம்பற் பூச்சுக்கள் பூசிக்கொண்டிருந்தன. கந்தசாமி வானத்தை அண்ணாந்துப் பார்த்தான். "நல்லவர்கள் எங்கிருந்தாலும் நாட்டுக்கு நன்மை செய்துகொண்டுதான் இருப்பார்கள்; வெற்றி தோல்விகளைப்பற்றியே அவர்களுக்குக் கவலை இல்லை. இல்லாவிட்டால் இந்தப் பொல்லாத வேளையில் நட்சத்திர ஒளிகள் எங்கோ இருந்துகொண்டு இங்கே உள்ள இருளை ஓட்டமுயற்சித்துக்கொண்டிருக்குமா?" என்று எண்ணினான். அண்ணாந்திருந்த தலையைக் கீழே தாழ்த்தி நேரே பார்த்தான். தன் எதிரே நெளிந்து நெளிந்து நீண்டு கிடந்த அந்தச் சாலை அத்தனை இருளிலும் நன்றாகத் தெரிந்துகொண்டுதான் இருந்தது. வாழ்க்கையில் எத்தனை நெளிவு சுழிவுகள் இருந்தாலும் வாழ்வு என்னவோ ஒரே இடத்தை நோக்கிப் போய்க்கொண்டுதான் இருக்கிறது, இந்தச்சாலை நம்மூரை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதைப்போல் என்றது அவனது மனம்.

எத்தனையோ இரவுகள் அந்தச் சாலையின் வழியாகத் தன் ஊரை நோக்கிச் சென்றிருக்கிறான். அவற்றில் எத்தனையோ தடவை இப்பொழுது செல்வதைப்போல் திரைப்படக் காட்சி பார்த்துவிட்டு நல்லிருளிலும் சென்றிருக்கிறான். ஆனால் ஒருதடவையாவது இது போன்று மனித வாழ்வைப்பற்றிய எண்ணங்களும், சிந்தனைக் குமுழிகளும் எழுந்ததில்லையே என்பதை நினைக்கும்போது அவன் முகம் அவனை அறியாமலே மலர்ந்தது. 'எல்லாம் இன்று நாம் பார்த்த திரைப் படத்தின் விளைவுதான்' என்றது அவனுடைய நா. மனித வாழ்வைப்பற்றிய எத்தனை உண்மையான கருத்துக்களை அந்தத் திரைப்பட வசனகர்த்தா கொட்டிக் குவித்திருந்தான்! அதில் சிந்திய சிதறல்தானே நாம் முன்பு நினைத்தது என்று எண்ணியபடி நடந்தான். அவன்கால்கள் விரைந்தன ஊரைநோக்கி.

இன்னும் அரைமணி நேரமாவது நடக்கவேண்டும். சுற்றுமுற்றும் பார்த்தான். துணைக்கு வருவார் யாரும் காணவில்லை. அதுபற்றி அவன் கவலைப்படவுமில்லை. அவன் கண்டத்திலிருந்து இனிய தொனி கிளம்பியது.

"சாலையிலே இரண்டுமரம்
சர்க்காரு வச்சமரம்
ஓங்கி வளர்ந்த மரம்,
உனக்கேத்த தூக்......'

— அவனுடைய கழுத்தை யாரோ பிடிப்பதுபோன்று பட்டது. "தூக்கு......தூக்குமரம்" பாடியது கூடப் பழைய மெட்டிலே அல்ல. அப்போது பார்த்துவந்த திரைப் படத்திலே கையாளப்பட்ட பாட்டு ஒன்றின் புதிய மெட்டிலே பாடினான். எடுப்பாகவும் இருந்தது. எனினும் இறுதியில் ஏன் தடைப் படவேண்டும்? வேறு ஒன்றும் இல்லை, அந்த இடத்தில் மெட்டுச் சரியாக இல்லை, அதுதான் காரணம் என்று அவன் மனத்தை அவனே தேற்றிக்கொண்டான். மீண்டும் பாடினான். தொனி, உச்சத்திலே நின்று இருளோடு இருளாகத் தன் நாதத்தை எங்கும் நிரப்பியது.

"சாலையிலே........................
........................தூக்குமரம்"

மேலும் மேலும் பாடினான். அவனை அறியாமலே பாடினான். இராக, தாள, சுருதி பேதங்களோடு பாடுகின்ற பாடகனின் பாடல் கூட அந்த நேரத்தில் தன் பாட்டு முன்னாலே நிற்காது என்று எண்ணியபடியே பாடினான். இயற்கையோடு ஒன்றி உணர்ச்சி வசமாகிவிட்டவனுக்கு இலக்கணக் கட்டுப்பாடு எதற்கு?

இவனுடைய குரலைக் கேட்டுச் சாலையிலே நிற்கும் மரங்களிலுள்ள பறவைகள் சரேலெனக் கிளைகளை விட்டுக் கிளம்பிக் கிளம்பி அமர்ந்தன. பறவைகள் கிளைக்குக்கிளை எழுந்து அமர்வது அவன் மனத்திற்கு இதமான ஒத்தடம்கொடுப்பதுபோல் இருந்தது. சிறுபிள்ளைகளைச் சீண்டிவிட்டு அவர்களின் அழுகையை ஆனந்திப்பதை ஒத்திருந்தது அவன் நிலை.

"சாலையிலே இரண்டுமரம்
சர்க்காரு வச்சமரம்
........................"

மீண்டும் பாடினான். எத்தனையோ காலமாக அந்தப்பாட்டை அவன் அறிந்திருந்தும் இன்று என்னவோ என்றும் இல்லாத புதுமை, ஒரு சுவை, தனி இன்பம் அந்தப் பாட்டிலே அவனுக்கு. கணவன் என்றும் கண்ணெதிரிலேயே காட்சியளித்துக்கொண்டிருக்கும் தன் மனைவியிடம் என்றாவது ஒரு நாள் என்றுமே இல்லாத ஒருதனி அழகைக்கண்டு மகிழ்வதுண்டல்லவா! அதுபோலத்தான் அவன் மனமும் மகிழ்ந்துகொண்டிருந்தது.

கால் மணிநேரம் நடந்திருப்பான். ஊருக்கு இன்னும் பாதிதொலைவு போகவேண்டும். அதற்குள் மணி பன்னிரண்டு ஆகிவிடும். 'மீண்டும் அதே பாட்டைப் பாடுவோம், ஆனால் புதிய பாணியில்' என்றது அவன் மனம். பாடத் தொடங்கினான். 'இது நன்றாகத்தான் இருக்கிறது' பாடினான்.

"சாலையிலே இரண்டுமரம்
....
....
........................தூக்......"

திடீரென்று பாட்டு நின்றுவிட்டது. தலையில் ஏதோ ஒன்று இடிப்பதுபோல...கிளையாக இருக்கும் என்று மேலே அண்ணாந்து பார்த்தான. இவன் தலையில் இடித்த வேகத்தில் ஏதோ ஊசலாடியது. உடனே கழுத்திலே நின்ற 'தூக்கு...' மூளையைத்தாக்கியது; யாரோ தூக்கிட்டுக்கொண்டு

......எல்லாம் நினைப்பு, அதற்குள் இவன் இடித்த வேகத்தில் தூரச் சென்றிருந்த அந்தப் பொருள் இவனிடமே வந்து சேர்ந்தது. உடன் உம்...கர்...உம்...கர் என்ற ஒலி வேறு. அவன் உள்ளத்தை யாரோ ஓங்கித் தாக்குவதுபோல் பட்டது. திரும்பி ஓடலாமா என்று மனம் நினைப்பதற்குள் அவன்மேல் அந்தப்பொருள் தட்டியது. அவன் கைகள் அவனைக்கேட்காமலேயே, தொங்கும் பொருளின் அடிப்பாகத்தைப் பிடித்துக்கொண்டன. மீண்டும் அந்தப்பேயொலி. நன்றாகப் பார்க்கத் தேவை இல்லை. யாரோ தூக்கிட்டுக்கொண்டு தொங்குகிறான். அவனுடைய கரங்கள் மேலும் தொங்குபவனின் கால்களைக்கெட்டியாகப்பிடித்துக்கொண்டன. தன்னைச்சுற்றி ஏதோ ஒன்று—அவனால் உணரமுடியாத ஒரு பயங்கரச் சூழ்நிலை உருவாகிவிட்டதுபோன்று ஆகிவிட்டது. ஒரு அடிகூடத் திரும்பி மேலே எடுத்துவைக்க முடியவில்லை. கண்ணை இறுக மூடிக்கொண்டான். மீண்டும் உம்...கர்...உம்... முனகல், கதறல், எல்லாம். ஐயோ ......தூக்கிட்டுக்கொண்டிருப்பவன் உயிரோடு போராடுகிறான். அந்தப் பீதியிலும் அவனைத் தூக்கிப்பிடித்துக்கொண்டான். தொங்குபவனின் மூச்சொலி அவனுடைய முகத்தருகே வந்து காதிலே கத்துவதுபோன்றிருந்தது. சில வினாடிகண்களைமூடியிருந்தான். பொறுக்க முடியவில்லை. மீண்டும் திறந்தான். அதே நிலை. எரிமலை குமுறும்போது எந்தெந்தப் பொருள்கள் வெளிவருகின்றன என்று காண முடிவதில்லையோ, அதுபோலத்தான் இவன் எண்ணக் குமுறல்களிலும் எது எது பீறிட்டெழுகின்றன என்று அவனால் நிதானிக்கவே முடியவில்லை. தலை சுற்றியது.

"ஐயோ! தூக்கு..."

அவன் மனம் ஓலமிட்டது.

"ஐயோ......" அவன் உள்ளம் உடல்,எண்ணம்எல்லாம் நடுங்கின. இவன் தூக்கிப்பிடித்தவுடன் சாவுக்கு ஓலை அனுப்பிக்கொண்டிருந்த அந்தத் துர்பாக்கிய மனிதனின் மூச்சு இப்போது மென்மையாகிக்கொண்டிருந்தது. ஆனால் இவனுடைய உள்ளத்தில் பீதியோ சுரம்போல ஏறிக்கொண்டே இருந்தது.

இந்நிலையில் 'சலக்...சலக்...' என்ற சதங்கையொலி. 'ஆகா...... பேயல்லவா வருகிறது' எங்கே ஓடுவது? எப்படி ஓடுவது? ஒன்றுமே புரியவில்லை இவனுக்கு. அதற்குள் சதங்கையொலிக்கிடையே கடமுடா என்ற ஒலியும் கூட. இதுபேயல்ல...வேறு ஒன்று ......வேறு என்ன? ஒலி வந்த திசையை நோக்கி, பாறையைப் புரட்டுபவன்போன்று கழுத்தைப் புரட்டிப் பார்த்தான். ஒலியோடு ஒளியும் தென்பட்டது அந்த ஒளி நம்பிக்கை ஒளியா? அல்லது நாசத்தின் வழியா? சாவு அவன்முன் கூத்தாடுவதுபோன்று இருந்தது. நன்றாக உற்றுப் பார்த்தான். அதோடு ஹை...ஹை...என்ற மனிதக்குரல். யாரோ வண்டிஓட்டி வருகிறார்கள். நம்பிக்கை பலப்பட்டது. உண்மைதான். வண்டி தான் வருகிறது. ஆனால் எந்தத் திசையிலிருந்து வருகிறது என்பதுமட்டும் அவனுக்கு விளங்கவில்லை. சில்லிட்டுக்கொண்டிருந்த கந்தசாமியின் உடலில் இதமாகச் சூடேறியது. உடனே வண்டியை நோக்கி ஓடவேண்டும். ஓடி நடந்ததைக்கூறி......மேலே பார்த்தான். தூக்கிட்டுக்கொண்டிருப்பவன் நிலை பரிதாபமாக இருந்தது. விட்டுவிட்டுச் சென்றுவிட்டால் மீண்டும் மூச்சுக் குழாயை கயிறுநெரித்து... அதனால்...தூக்கிப்பிடித்தபடியே கூவினான். "ஐயா...வண்டி...ஓட்டிவா...ஒருத்தன் தூக்கிலேதொங்குகிறான்" உள்ளத்தின் அதிர்ச்சி சொல்லோசையிலே அதிர்ந்தது.

"தூக்கா!......" வண்டிக்காரன் முழிபிதுங்கக் கேட்டான்.

"ஆமா...ஒருத்தன் தொங்குகிறான்" என்றான் கந்தசாமி.

"ஐயோ......" அத்தோடுவந்து கொண்டிருந்த ஒலி நின்றுவிட்டது. வண்டியை நிறுத்திவிட்டான் வண்டிக்காரன்.

வண்டிக்குள்ளேயே மற்றொருவரோடு பேசுவது கேட்டது கந்தசாமிக்கு.

"இப்படியே திரும்பிவிடலாமண்ணே! அங்கே என்னமோ தூக்காம்......"

வண்டியிலிருந்த மற்றவன் பதில் சொல்வதற்கு முன், கந்தசாமி கத்தினான், "ஐயா...ஐயா...வாங்கய்யா ...நானிருக்கேன்" தனக்குத்தானே குழிவெட்டிக்கொண்டோமேஎன்று எண்ணுவதைத் தவிர வேறு வழியில்லை. இப்பொழுது அந்தவண்டியும் திரும்பிவிட்டால்...கந்தசாமியின் மனம் மீண்டும் பீதிக்குகையிலே புகுந்துகொண்டது.

நிமிர்ந்து பார்த்தான். வண்டி மீண்டும் வந்த வழியே நகர முயன்றுகொண்டிருந்தது. "ஐயோ என்ன பெருந்துன்பம், நீ அழைக்காமலிருந்திருந்தால் வண்டி தானாகவே வந்து இருக்கும். நீயே படுகுழியை வெட்டிக்கொண்டதுமல்லாமல், அதிலே வீழ்ந்து மண்ணையும் சரித்துவிட்டுக்கொண்டாயே' என்றது அவன் மனம். வேறு யாரும் விடியும்வரை இனி இப்பக்கம் இவ்விரவில் வரமாட்டார்கள். அப்படி வராவிட்டால், நாம் இப்படியே தாங்கிக்கொண்டு......! அதற்கு மேலும் அவனால் சிந்திக்க முடியவில்லை. தன் பலம்கொண்டமட்டும் கத்தினான். "ஐயா...என்னை யாவது காப்பற்றுங்கள்...என்னை யாவது காப்பாற்றுங்களய்யா..." கத்திக்கொண்டே இருந்தான். மனம் மயங்கிவிட்டது. இப்போது கந்தசாமி தூக்கிட்டுக்கொண்டவனைப் பிடித்துத்தொங்க ஆரம்பித்துவிட்டான்.

பரிதாபகரமான இந்த நிலையில் வண்டிக்குள்ளே இருந்தவன் 'என்னவென்றுதான் பார்ப்போமே' என்று துணிந்து, வண்டிக்காரனையும் தைரியப்படுத்தி அழைத்து வந்து பார்த்தான். கந்தசாமி சொன்னது உண்மையெனத் தெரிந்தது. உடனே அருகாமையிலுள்ள ஆஸ்பத்திரிக்கு இருவரையும் எடுத்துச்சென்றனர். சிலநாட்கழித்துச் செய்தித் தாள்களில் இந்தத்தலைப்பில் செய்தி ஒன்று வெளிவந்தது.

"மாண்டவன் மீண்டான்! மீட்டவன் மாண்டான்"

செய்தியைப் படித்தவர்கள் ஏதோ பலப்பல காரணங்களைக் கூறி விவாதித்தனர். அதிலே 'பேய்'பற்றிய பேச்சே அதிகம். அது என்னவோ உண்மைதான். அச்சம்தானே பேய் என்ற சொல்லையே உருவாக்கியது. பேய் என்று தனியாக எதுவும் இல்லை. புராண காலத்தில் உருவாக்கப்பட்ட இந்தப் 'பேய்'தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் புறம்பான —தேவையற்ற— அச்சத்தை உண்டாக்கக்கூடிய ஒரு சொல்லாக அமைந்துவிட்டது. கந்தசாமியை இந்தப் பேய்தானே அறைந்து சாகடித்துவிட்டது.

இபபோது புரிகிறதா 'பேய்' என்றால் என்ன என்று!

✠

மொட்டை வாழ்க...!

கயற்கண்ணன்

என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு? நான்தான் மன்னார்சாமி!

ஓகோ! என் தலையைப்பார்த்துப் பிரமிக்கிறீர்களா? இதிலென்ன ஆச்சரியம் இருக்கிறது!

இதற்கு முன்னேயெல்லாம் எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா? எவ்வளவு செலவு தெரியுமா? இப்போது எனக்குச் சிரமமுமில்லை, செலவுமில்லை!

இப்போது நான் எவ்வளவு அழகாயிருக்கிறேன்? இதற்கு முன்னர் என்னைப் பார்த்துப் பரிகசித்தவர் எல்லோரும் இப்போது என்னைக் கண்டு ஒரு தினுசாகப் பார்க்கிறார்களே! அதாவது, பக்திக் கண்ணோட்டத்திலல்லவா பார்க்கிறார்கள்!

எனது பளபளக்கும் மொட்டைத் தலையையும், கழுத்திலே தொங்கும் உருத்திராட்சக் கொட்டையையும், நெற்றியிலே காணும் திருநீற்றுப் பட்டையையும் கண்டவுடனே 'சுவாமி'' என்றல்லவா அழைக்கிறார்கள்! "டேய்'' என்றவர்கள், "மன்னாரு'' என்றவர்கள் எல்லோருமே என்னை இப்போது "என்ன சுவாமி'' என்றல்லவா அழைக்கிறார்கள்!

என்ன, நானே எனது மொட்டையை வாழ்த்துகிறேனே என்று பார்க்கிறீர்களா? என்னடா, திடீரென்று மொட்டையாகிவிட்டானே என்று யோசிக்கிறீர்களா?

அதெல்லாம் ஒன்றும் நான் திடீரென்று மொட்டையாகிவிடவில்லை. சிறுகச் சிறுக எனது அனுபவத்தால் ஏற்படுத்திக்கொண்ட மொட்டையிது! ஒன்றும் கேவலமாய் இதைப்பற்றி நீங்கள் நினைக்க வேண்டாம்!

'குடுமி'யிலிருந்து 'கிராப்'பாகி, 'கிராப்'பிலிருந்து 'சம்மர்' ஆகி, 'சம்மரி'லிருந்து அடுப்புக்கட்டியாகி, 'அடுப்புக்கட்டி'யிலிருந்து 'அப்பளக்குடுமி'யாகி, அதாவது 'கருப்புட்டி வெட்டு' ஆகி, 'கருப்புட்டி வெட்டி'லிருந்து மொட்டையானதாக்கும்! இது சாதாரண அனுபவமா?

இந்த மாபெரும் அனுபவத்தை உங்களுக்குச் சொன்னால்தானே தெரியும்! சொல்கிறேன் கேளுங்கள்!

ஆதியிலே, எனது குடுமித் தலையை—சுருண்டு நீண்டு அடர்ந்து தொங்கிய எனது கேசத்தைக் கண்டு தற்காலக் கூழைவால் தலைப் பெண்களெல்லாம் பொறாமைப்பட்டார்கள்! உண்மைதான், நானே, "நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்திருக்கக்கூடாது?'' என்று கூட எண்ணினேன்.

எனது குடுமியை விதவிதமாக அழகு செய்து பார்த்து மகிழ்ந்திருக்கிறேன்! 'பின்னல்', 'பர்மா', 'கோடரிமுடிச்சு', சினிமாக்களிலே வருகிறார்களே கதாநாயகிகள், சடைபுடிச்சது மாதிரி சுத்தி சுத்தி விட்டுக்கிட்டு. அதைப்போல, இத்யாதி; இத்யாதி!

ஒரு நாள் பக்கத்துப் பட்டினத்திலே உள்ள எனது நண்பன் பரமசிவத்தைப் பார்க்கப் போயிருந்தேன். அவர்கள் வீடு மிகவும் சிறியது. இரவு வெகுநேரம் வரை பேசியிருந்துவிட்டு, வாசல் ஓரமாகப் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் படுத்தேன். பரமசிவம், அவனுடைய அம்மா எல்லோரும் திண்ணையில் படுத்திருந்தார்கள். பரமசிவம், ஒரு சிகப்புப் போர்வையைக் கொடுத்தான். அதனால் கால் முதல் முகம்வரை மூடிக்கொண்டு நன்றாகத் தூங்கிவிட்டேன்.

இரவு மணி மூன்று இருக்கும். நான் எங்கோ வானவெளியில் மிதந்து செல்வதுபோல் கனவு கண்டேன்! கண் விழித்தேன்! என்ன விந்தை! உண்மையிலே நான் வானவெளியிலேதான் புஷ்ப விமானத்தில் தவழ்ந்து சென்று கொண்டிருந்தேன்! யாரோ 'குசுகுசு'வென்று பேசும் ஒலி கேட்டு கூர்ந்து கவனித்தேன்!

* * *

"என்னடா கிட்டு! இந்தப் பொண்ணு தலைமுடியைப் பாத்தியாடா? எவ்வளவு நீளம்! எவ்வளவு அடர்த்தி!''

"ஆமாண்டா கிட்டு! இந்த முடியைப் பாத்தா, வயசு இருபதுக்கு மேலே இருக்காது போலிருக்கு.''

"டேய் மடையன்களா? என்னடா வயசு ஆராய்ச்சியிலே பூந்தீட்டீங்க? நாம, கழுத்திலே காதிலே எதனாச்சும் இருக்கும்னு நெனைச்சுத்தானே சத்தம் போடாமே கட்டிலோட தூக்கிக்கிட்டு வர்ரோம்?''

"இருந்தாலும் வண்டு, வயசுப் பொண்ணு, நாமோ வாலிபப்பசங்க, சபலந்தட்டாதா என்ன!''

* * *

என்னால் இதற்கு மேல் கேட்டுக் கொண்டிருக்கமுடியவில்லை! செத்த பிறகுதான் நாலு பேர் சுமந்திலே எல்லாரும் போவாங்க! எனது அதிர்ஷ்டம். உயிரோடேயே போற காலம் வந்திருந்தது!

என்னை ஒரு பெண்ணென்று எனது முடியை மட்டுமே பார்த்து நினைத்து, ஏதாவது நகை போட்டிருக்கலாம் என்று முடிவுசெய்து ஊருக்கு வெளியில் தூக்கிவந்து விட்டார்கள் இந்த அப்பாவி முரடர்கள்!

ஒரு முடிவுக்கு வந்த நான், அப்படியே எழுந்து உட்கார்ந்தேன்! அசைவு தெரிந்ததும் திடீரென்று கட்டிலைக் கீழே இறக்கினார்கள். நான் ஆவேசம வந்தவனைப்போல, "டேய் யாரடா அவன் என்னைத் தூக்கி வந்தது?" என்று அடித்தொண்டையால் கத்திக்கொண்டே போர்வையை விலக்கி யெறிந்து விட்டுக் கீழே குதித்தேன!

எனது உருவத்தையும், குரலையும் கண்ட முரடர்கள், தங்கள் ஏமாற்றத்துக்கு வெட்கி, எடுத்தார்கள் ஓட்டம்!

பின்னர் கட்டிலையும் தூக்கிக்கொண்டு ஊருக்குள் வந்தேன்! பொழுதும் விடியும் நேரமாகிவிட்டது. எனது நண்பனும், வீட்டார்களும், கட்டிலுடன் என்னைக் காணுமல் கலங்கிப்போய் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தார்கள்!

கட்டிலுடன் என்னைக் கண்டதும் அவர்கள் ஏதும் புரியாமல் விழித்தார்கள்! நான் என் கதையைச் சொன்னதும், 'எனது முடியால் வந்த வினையிது என்று எல்லோரும் பரிகாசம் செய்து, விழுந்து விழுந்து சிரித்தார்கள்! கீழே விழவில்லை; நின்றபடியே!

எனது நண்பன் பரமசிவம் முதல் வேலையாக எனது குடுமித்தலையை கிராப்பாக்கினுன்!

என்ன சிரிக்கிறீர்கள்? ஓகோ! அவன் கிராப்பாக்கவில்லை; 'பார்பர் ஷாப்'புக்கு அழைத்துச்சென்று கிராப் செய்துவிடச் செய்தான்!

பின்னர், எனது ஊர் போய்ச் சேர்ந்தேன். அன்றிலிருந்து நான் எனது கிராப்பை அழகு செய்வதிலே ஈடுபட்டேன். ஒரு பக்கம் படியச் சீவிவிட்டு, மறுபக்கம் வேண்டுமென்றே விரல்களினுல் கிளப்பிவிட்டிருப்பேன்! சுருண்ட முடியாதலால், அது என்னை ஒரு 'ரௌடி' மாதிரிக் காட்டிவந்தது. இதைப் பார்த்த உண்மை ரௌடிகளுக்கு என்னிடம் பொருமை ஏற்பட்டது. ஏனெனில் அவர்களது தலை ஈர்க்குச்சிக் கற்றை மாதிரி—மறைப்பானேன்; தேய்ந்த துடைப்பம் மாதிரித்தானே இருந்தது!

அவர்களிலே இருவர் ஒருநாள் ஒரு மதகின்மேல் உட்கார்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். என்னைக் கண்டதும் ஒருவன் மற்றவனைத் திட்டினுன்.

"ஏய், உனக்கு எங்கடா புத்தி வரப்போவுது. அதோ போருரே மன்னுர்சாமி, அவரு காலுலே போய் விழுடா; அப்பவாவது புத்தி வருதா பார்க்கலாம்."—இது ஒருவன்.

"நான் ஏன் அவன் காலுலே விழணும்? அவன் தான் எங்காலிலே விழட்டுமே!"—இது மற்றவன்.

எப்படியிருக்கிறது? எனக்குக் கெட்டகோபம் வந்தது! "வழியிலே செல்லும் என்னிடம் ஏண்டா வம்பளக்கிறீங்க, ரௌடிப் பசங்களா?" என்றேனே; அவ்வளவு தான்!

"யாருடா ரௌடி? உன் தலையைப் பார்த்தாலே தெரியுதே!" என்று ஒருவன் என் தலைமுடியைப் பிடிக்க, நான் என் தலையை விடுவிக்க முடியாமல் விழிக்க, மற்றவன் எனது முதுகில் மேளம் வாசிக்கப் பழக, அப்பப்பா! "போதும் போதும்" என்ருகிவிட்டது!

அன்று அடித்தேன் 'சம்மர்!' நானல்ல, எனது ஊர் சவரத் தொழிலாளி அடித்துவிட்டார்!

எங்கள் ஊரில் 'முசுக்கட்டைப் பூச்சி', அதாவது "ரோமரிஷி"கள் அதிகம்! அதில் ஒன்று ஒருவர் தோள்பட்டையிலே பட்டுவிட்டது! அவர் அவசர அவரமாக என்னை அழைத்து, "உனது தலையை எனது தோள்பட்டையிலே தேய்த்து, ஒட்டியிருக்கும் பூச்சியின் சாம்பல் நிற ரோமத்தை எடுத்துவிடு" என்ருர்.

அந்தப் புண்ணியவான் நான் செய்த உதவியைப் போற்றி, எனது தலையைப் "பிரஷ்" என்று வருணித்து, "இந்தச் 'சம்மரை'விட 'அடுப்புக்கட்டி' உனது முகத்துக்கு எடுப்பாயிருக்குமே!" என்று சிபாரிசு செய்தார்!

அச்சிபாரிசை அன்றே ஏற்றுச் செயல்படுத்தினேன்!

எனது பக்கத்துவீட்டுப் பெரியவர் எனது தலையழகைப் பார்த்துவிட்டு, "என்னடா மன்னுரு! நீ நாகரிகமா நடந்துக்கமாட்டேங்கறியே! இந்த அடுப்புக்கட்டி நல்லாத்தான் இருக்கு; இருந்தாலும் இது ரொம்பப்பத்தாம்பசலியாச்சே! இதோபாருஎன் அப்பளக்குடுமியை. இப்போதைய பெரிய மனுஷன் முடியெல்லாம் இப்படித்தாண்டா இருக்கு! நீ பெரிய மனுஷன் ஆக வேண்டாமோ; என்னைப்போல குடுமி வையுடா! இது குடுமியுமில்லே; கிராப்புமில்லே; நடுத்தரம்! என்ன! சொல்றது புரியுதா?" என்ருர்!

அவர் சொன்னதையும் ஆராய்ந்தேன்! எங்கள் ஊர் பெருந்தலைகளெல்லாம் அப்படித்தான் இருந்தனர்! "சரி, நாமும் பெருந்தலை ஆயிடவேண்டியது" என்று நினைத்தேன்; நினைத்தை முடித்தேன்! நினைத்ததை முடிக்க உங்களால் முடியுமா?

கொஞ்ச நாள் சென்றது. எனக்குக் காய்ச்சல் வந்தது. "இது சாதாரணக் காய்ச்சலல்ல; 'டைபாயிட்'" என்ருர் டாக்டர். ஏதேதோ மருந்து கொடுத்தார்; ஊசிகளும் போட்டார். அவரை நம்பாத எனது பாட்டி, எங்கள் குலதெய்வத்துக்கு முடி கொடுப்பதாக வேண்டுதல் செய்துகொண்டாள்!

ஒரு மாதத்திற்குப் பிறகு உடம்பு நலமாகிவிட்டது! உடனே பாட்டி, பத்துக் கல் தொலைவிலுள்ள எங்கள் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று மயிரைக் கொடுத்துவிட்டு, சுவாமிக்கு அர்ச்சனையும் செய்துவிட்டு வரச்சொன்னுள்!

பாட்டியின்செல்லப்பிள்ளையாகிய நான் அவள் சொல்லியதை மறுப்பேனு? நிறைவேற்றினேன்!

தந்தை சொல்லைப் போன்ற மந்திரம் எதுவும் இல்லை. தாயைவிடச் சிறந்த கோயில் எதுவும் இல்லை என்பது என்னவோ எனக்குத் தெரியாததல்ல. இருந்தாலும் தாய் சொல்லைத் தட்டிநடக்கக் கூடாதல்லவா! தாயின் அறியாமையை நீக்கும் உபதேசம் புரிய அதுவாசமயம்? எனக்கென்னவோ அந்தமாதிரி செய்வது பிடிக்காமல் தான் இருந்தது. உயிரைக் கொடுத்த சாமிக்கு......என்றெல்லாம் விளக்கம் கூறிக்கொண்டிருக்க முடியுமா அந்த நேரத்தில்? எனவே தாயார் சொன்னபடி செய்து முடித்தேன்.

திரும்பி வரும்போது ஒரு சாமியார் என்னைப் பார்த்தார்! அவருக்கு என்னைக் கண்டதும் என்ன தோன்றிற்ருே?...

"அப்பனே!" என்றார்.

"என்ன சுவாமி?" என்றேன்.

"நாடகமே உலகம்!" என்றார்.

"நாளை நடப்பதை யாரறிவார்?" என்றேன்.

"நான் அறிவேன்!" என்றார்.

"அடியை மறந்துவிட்டீர்கள் சுவாமி, அடுத்த அடி அதுவல்லவே" என்றேன்.

"மறப்பவன் நானல்ல! பக்தா, உனக்கு மோட்ச லோகத்தைக் காட்டுகிறேன்! என் சொற்படி நட" என்றார்.

"சித்தம் சுவாமி!" என்றேன்.

விபூதி தந்தார்! நெற்றியில் பூசிக் கொண்டேன்! அவர் கழுத்தில் கிடந்த ருத்திராட்ச மாலைகளில் ஒன்றை என் கழுத்தில் போட்டார்!

"எமன் பொல்லாதவன் விட மாட்டான் சாம்பசிவப் பக்தனென்றால் தொடமாட்டான்" — எங்கே சொல்லிக்கொண்டே ஆடு என்னைப் போல" என்றார்.

நான் ஆடவில்லை; சிந்தித்தேன்; சிந்தித்துப் பயன்? முடிவொன்றும் கிட்டவில்லை! ஏதோ ஒரு கோயில் தென்பட்டது; அமர்ந்தேன். எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தேனோ தெரியாது!

"என்ன சுவாமி! என்ன வேண்டும்?" என்றனர் கூடியிருந்தோர்!

"நீங்களெல்லாம் நல்லாயிருக்க வேண்டும்" என்றேன்.

எல்லோரும் வணங்கினார்கள்! ஆசி கூறினேன்! அன்று முதல் நான் ஒரு யோகி! என்னை எல்லோரும் "சுவாமி சுவாமி" என்கிறார்கள்!

நானும் எனக்குப் புரியாத பல விஷயங்களைப்பற்றி அவர்களிடம் பேசுகிறேன்! அவர்களும் **புரிந்தது மாதிரி** தலையை ஆட்டிக்கொண்டே "என்ன இருந்தாலும் சுவாமி பெரிய வேதாந்தி" என்று வாழ்த்துகிறார்கள்!

இந்த அளவுக்கு வாழ்த்தைத் தேடித்தந்த என்னுடைய மொட்டை வாழவேண்டாமா என்ன? நீங்களே சொல்லுங்கள்!

ஔவை கண்ட நாடு!

[எம். வி. துரை]

அரைத்தால் உடல் மணக்கும்! புகைத்தால், தெரு மணக்கும்! தொட்டால் கை மணக்கும்! துவைத்தாலும் நீர் மணக்கும்! அந்தச் சந்தனக் கட்டையில் செய்த ஊன்றுகோல்! தளர்ந்த நடையொடு அறிவு செறிந்த முகத்தொடு அந்தக் கிழவி சென்று கொண்டிருக்கிறாள்!

"யானைகட்டிப் போரடிக்கும் எங்க அய்யனார் பண்ணையிலே! களஞ்சியம் நிரம்ப வேணும், கை நிறையத் தரவேணும்" என்று பலர் பாடும் குரல் அக்கிழவியின் காதில் கேட்டது! பாடுவோர் அருகில் சென்றாள்!

பாட்டியின் வருகையைக் கண்ட அந்த வேலையாட்கள்! பாடுவதை நிறுத்திவிட்டு வாங்க பாட்டி, யார் நீங்க என்று பணிவோடு கேட்டார்கள்!

இதைக்கேட்ட அந்தப் பாட்டி ஏனப்பா யானையா கட்டிப் போரடிப்பாங்க என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்!

அந்த வேலையாட்கள் சிரித்துக் கொண்டு, என்ன பாட்டி! உனக்குத் தெரியாதா! அங்கு பார் பாட்டி என்று அடுத்த களஞ்சியத்தைக் காட்டினார்கள்! பார்த்தாயா பாட்டி? வியப்போடு ஆமா தம்பி! இந்த நாட்டைப் பார்க்க மகிழ்ச்சியப்பா என்றாள்!

வேலையாளில் ஒருவன் பாட்டியைப் பார்த்து நீ எந்த ஊர் பாட்டி என்றான்!

"நானா? எனக்கு ஊரேது பேரேது! ஏதோ களஞ்சியந் தோறும் ஏதாவது கொடுத்தால் வாங்கிப் போகலாமென்று வந்தேன்! இங்கு எனக்குக் களஞ்சியப் பிச்சை தருவார்களா!

இதைக்கேட்ட ஒருவன் நகைத்து, பாட்டி! உனக்கு எவ்வளவு வேணுமோ வாங்கிப் போகலாம் என்றான்!

அப்போது குதிரைமீது ஐம்பது வயது நிரம்பப் பெறாத ஒருவர் வந்தார். எல்லா வேலையாட்களும் வணங்கினார்கள்! அவர்களைக் கண்டு, அவர், இந்தக் கிழவி யார் என்றார்!

"இந்த அம்மா அங்காடிப் பிச்சை கேட்க வந்தார்களாம்" என்றார்கள்.

அந்தபண்ணைக்காரர்சிரித்தபடி, பாட்டி உனக்கு எவ்வளவு வேண்டும்! வேலையாளைப் பார்த்து ஒரு மூட்டை பாட்டி வீட்டில் சேர்த்து வா என்றார்!

அதற்கு அந்தப் பாட்டி வேண்டாமப்பா; ஒரு படி இரண்டு படி கொடுத்தால் போதும் என்றாள். அவர் சிரித்துக்கொண்டே உனக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தருகிறோம் என்றார். அதற்குக்கூட அந்தப் பாட்டி இன்று வேண்டாம் நாளை வருகிறேன் என்று கூறிப் புறப்பட்டாள்! இச்செய்கை அவர்களுக்கு வியப்பைத் தந்தது.

சென்ற கிழவி வேகமாகக் கீழ்த் திசை நோக்கிப் புறப்பட்டாள். அவள் எதிரே யானைக்கூட்டம் ஒன்று வேகமாக ஓடிவந்தது. சுற்றிலும் யாரையும் காணோம். அது

ஒரு பயங்கரக் காடு என்பதைத் அப்போதுதான் உணர்ந்தாள்! இன்று நம்மை இந்தக் கூட்டம் ஒழித்துவிடும் என்று பயந்து திகைத்து நின்றாள். சிறிது நேரத்தில் அந்த யானைக் கூட்டம் சிதறியோடக் கண்டாள்! சுற்றிலும் பார்த்தாள்! அங்கே வேடனொருவன் கணை தொடுத்து நிற்பதைக் கண்டாள். பிறகுதான் பாட்டிக்கு நல்ல உயிர் வந்தது! பாட்டியும் வேடனை நோக்கி நடந்தாள், வேடனும் பாட்டியிடம் வந்தான்.

பாட்டி இப்படித் தனியே இந்தப் பயங்கரக் காட்டில் வரலாமா! என்றான்!

நிலையில்லாக் கட்டை இன்று போனாலென்ன! என்று போனாலென்ன! என்று கூறி நடந்தாள்! குறுக்கே பச்சை மலைக்காடு மறித்தது, அதனுச்சியையும் பார்க்க வேண்டுமென்று ஆவலோடு வேகமாக ஏறினாள்; களைப்பு உண்டாயிற்று. படர்ந்த பச்சைமர நிழலில் உட்கார்ந்தாள்! அண்ணாந்து பார்த்தாள்! காதலர் கூடிப்பேசுவதுபோல ஜோடி ஜோடியாக, பலாப்பழம் அம்மரத்தில் தொங்குவதைக் கண்டாள். கிழவிக்கு நாவிலே நீரூறிற்று!

அங்கே ஒரு மந்தி பலாப்பழத்திடம் யுத்தம் செய்து புட்டுக்கொண்டு இருந்தது, உடனே ஒரு பழம் கீழே விழுந்தது, என்? இன்னொரு பழமும் கீழே விழுந்தது, கிழவிக்குத் தூக்கிவாரிப் போட்டது! அங்கு ஒரு மந்தி ஓடிவந்தது. முழுப்பழத்தைத் தூக்க முடியாமல்—தூக்கிக்கொண்டு ஓடியது. மற்றொரு பழம் விழுந்த வேகத்தில் இரண்டாக பிளந்து மணம் வீசியது, ஏக்கம்கொண்ட பாட்டி எழுந்துபோய் அப்பழத்தை எடுக்க முயன்றாள்! அவ்வமயம் எங்கிருந்தோ இரண்டு மந்திகள் ஓடிவந்தன. ஒரு பாதிப் பழத்தை தூக்கி ஓடியது! அடுத்த மந்தி, கிழவியெடுத்த அந்தப் பழத்தையும், பிடுங்க வந்தது! பாட்டி பயந்தவளாக, மந்தியை விரட்டலாமென, தடியெடுக்க வந்தாள். அதற்குள், அந்த மந்தி அப்பழத்தையும் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டது. கிழவி ஏமாந்தவளாகச் சுற்றிலும் பார்த்துக்கொண்டு நின்றாள்!

அங்கே ஒரு மலை நாடன் வந்தான், பாட்டியைக்கண்டு என்ன பாட்டி ஏன் இப்படி நிற்கிறாய் என்றான்!

தம்பி பலாப்பழம் விழுந்தது. தின்ன எழுந்துபோனால் மந்தி தூக்கிக்கொண்டு ஓடிவிட்டது என்றாள். இதைக்கேட்ட அந்தமலை நாடன் இதற்குத்தானா பாட்டி கவலை! வாபாட்டி என்று அழைத்துப்போய்காவட்டைகளால் வேயப்பட்ட ஒரு குடிசையில் அமர்த்தி, கருவாழை இலைபோட்டு வேரிலே வெடித்த பலாச்சுளை பகிர்ந்து வைத்துச் சுரைக்குடுக்கையில் இறுத்து வைத்துள்ள கொம்புத் தேனூற்றினான். பலாச்சுளையை எடுத்துத் தேனில் துவைத்துத் தின்றுவிட்டுத் தம்பி, வாழ்க! பல வளம்பெற்று வாழ்க! என்று சொல்லிப் புறப்பட்டாள்!

தென்திசைநோக்கி அந்தப்பாட்டி புறப்பட்ட வேகம் தென்குமரி சென்றுதான் திரும்பிப்பார்ப்பவள் போல் சென்றாள்!

அங்கே கழனிகளும், கால்வாய்களுமாகவே இருந்தன. உழவர்கள் உழுதனர். பெண்டிர் கதிரறுத்துக் கட்டெடுத்துக் களம் நோக்கிச் சென்றனர். கருமைமலைக் காளைகளும், மேய்ந்தன! கறவை மாடுகளும் புல்தின்று அசைபோட்டுப் பெருமூச்சுவிட்டு நின்றன.

அங்கு ஒரு சிறுமி அப்பசுவைத் தடவிக் கொடுத்தாள். பசுவும் அந்தச் சிறுமியை முகர்ந்து நாக்கால் நக்கியது. அந்த இடம் சென்று அந்தப் பாட்டி, அம்மா பசிக்குது தண்ணீர் கிடைக்குமா? என்றாள்.

அந்தச் சிறுமி சிரித்து, என்ன பாட்டி! தண்ணீரா வேண்டும், வா பாட்டி, தயிரில் கலந்த மயிலரு சம்பா சோறு சாப்பிட்டுப் பசியாறலாம் என்று பாட்டியின் கையைப் பிடித்து இழுத்துப்போய் உண்ணக் கொடுத்தாள்.

அச்சிறுமியின் தகப்பனார் வந்தார். என்ன இது என்றார் அவர். அதற்கு அந்தச் சிறுமி, அப்பா! பாட்டிக்குப் பசிக்குதாம்! சோறு தந்தேன் என்றாள். கேட்ட அவர் கோபமாக ஏனம்மா, வீட்டிற்கு அழைத்துப்போய்ப் பருப்பும் பச்சடியும், பலவித கறிவகைகளோடு போடாது இப்படித் தனிச்சோறு கொடுப்பதா என்றார்.

அந்தப் பாட்டி சிரித்தவளாக, அப்பா! தள்ளாதகிழவிக்கு இந்தத் தயிர்ச்சோற்றைவிடத் தெள்ளமுது வேறு உண்டா என்றாள். பின் அவர் மகிழ்வோடு பாட்டி, நிழலில் இளைப்பாறுங்கள். ஐயா வீட்டுக் களஞ்சியத்திலே இன்று சம்பா நெல் குத்திச் சர்க்கரைப் பொங்கல் செய்து, வருவார் போவார்க்கெல்லாம் வழி விருந்து செய்வாங்க! நீங்க சாப்பிட்டுப்போகலாம் என்றார்.

இதைக்கேட்ட அந்த பாட்டி வேண்டாமப்பா! இப்போ சாப்பிட்டது தலைக்கு மேலே. நான் குமரிக் கடல் போய்வரணும். இனியொரு முறை வருகிறேன் எனக் கூறிப் புறப்பட்டாள்.

அவள் போன தனி நடையழகையே வேடிக்கை பார்த்தார்கள். அந்த ஆற்றங்கரையிலே பரதவர் மீன் பிடித்து அகில் கட்டையை எரித்து, அதிலே அம்மீன்களைச்சுட்டுப் பொசுக்கிக் காரைமுள் கொண்டு சுட்டதொரு கெண்டைகளைக்குத்தி எடுத்து இள மூங்கில் குருத்திலையைக் கீழேபோட்டு ஒன்றொன்றாக வைத்துக்கொண்டிருந்தான்! அந்த இடத்திற்கு அன்னநடைபோட்டு நன்னடையாளொருவள் வந்து 'களுக்'கென்று சிரித்தாள்!

ஓடும் கெண்டைகளை வலைபோட்டுப் பிடித்தவன் இந்த ஒய்யாரியைச் சும்மா விடுவானா! ஏ புள்ளே! இந்தக் கெண்டை உன் விழிகளைப் போல் உள்ளதடி! என்று ஒரு கெண்டையையும், முள்ளால் குத்தி எடுத்துக் காண்பிப்பான்!

அவள் முகம் சுளித்தவாறு, போ மச்சான்! கையாலாகாவிட்டாலும் வாய்ப்பேச்சுக்குக் குறைச்சலில்லை என்பாள். அவ்வளவு தான் தாமதம், அவளுடல் அவன் அணைப்புக்கு அடிமையாகிவிடும்! அந்த வேளையிலே இந்தப் பொல்லாத கிழவி போகவேண்டுமா? போனாள், என்ன குழந்தைகளே! என்றாள்.

அப்போதுதான் அந்தக் காதலர் இன்ப உலகம் விட்டுத் திரும்பிப் பார்த்து, சிறுநகையோடு, யார் பாட்டி நீங்க என்றார்கள்,

பாட்டியோ எனக்கு ஊரேது பேரேது! என் பசிக்கு, உணவளிப்பீர்களா! என்றாள். கேட்டஅவன் மகிழ்வோடு, பசிக்குதா பாட்டி எனச் சிரித்தான். அதற்குள் அந்தச் சிங்காரி மூங்கின் குருத்திலை போட்டு உட்கார் பாட்டி என்றாள்.

இதைக் கண்ட அவன், ஏ புள்ளே! பல்லில்லாத பாட்டிக்கு முள்ளில்லாத உளுவைக் கெண்டை எடுத்துவை என்றான்! அவளும் சில மீன்களை எடுத்து வைத்து மக்காச்சோளப் பிட்டு எடுத்துவைத்தாள்.

அந்தப் பிட்டைப் பாட்டி, பொக்கை வாயால் குதப்பி ஒரு கெண்டையை எடுத்து மென்றாள். அந்தக் கெண்டை அரைபடாது, அதனின்று கசியும் நெய், தாழ்வாயெல்லாம் ஒழுகியது.

கண்ட அவர்கள் சிரித்தார்கள், பின் அந்தக் கட்டழகி, பாட்டியின் வாயைக் கழுவிவிட்டு வயிறு நிரம்பியதா என்றாள். அந்தக் கிழவி ஏப்பம் விட்டபடி வாழ்கவென்று கையமர்த்தி வருகிறேனெனக் கைகூப்பிப் பயணம் துவக்கினாள், நெடுநாள், கடந்து தென் திசையடைந்தாள்.

அங்கே ஒருவன் கூடையைத் தூக்கிப் போய்க்கொண்டிருந்தான். குமரியொருத்தி அவன் பக்கம் சென்று, ஏன் மச்சான் என்னை மறந்துட்டியா, உன்னைப் பார்க்க முடியலையே! என்றாள். இதைக் கேட்ட அவனுக்கு, ஆனந்தம் பொங்கியது.

"சுண்டு முத்துக் கண்டெடுக்கக் குமரிக் கடல், சென்றேனடி! அங்கே கெண்டை ஒன்று வந்ததடி, அதிலும் உன் அன்புருவம் கண்டேனடி" என்று பாடினான்.

இதைக்கேட்ட அந்தப் பெண் நாணிக்கோணி, எப்பவும் உனக்கு பாட்டுத்தானா என்றாள். பின்னுமவன் அழகு முத்து எடுத்து வந்து அரண்மனையில் விற்றுவிட்டுக் கைநிறையப்பணம் வாங்கி உன் கழுத்தில் தாலி கட்டப் போறேன் என்று மீண்டும் பாடினான்.

அவள், போ மச்சான் வெட்கமாயிருக்கு, பாட்டுப்பாடாதே என்றாள் இப்படிப் பேசும் அந்தக் காதலர்களிடம் சென்றாள் அந்தக் கிழவி! என்ன குழந்தைகளா விளையாட்டு என்றாள்!

திரும்பிப் பார்த்து அந்தக் குமரி பாரு பாட்டி, மச்சான் என்னைக் கண்டதும் கேலிப் பாட்டுப் பாடுறாரு என்றாள். அவன் பாட்டியைப் பார்த்து, பாட்டி! அடுத்த மாதம் கட்டிக்கப்போறேன் அதைக் குறித்து இப்போது பாடினேன் என்றான்!

பாட்டி சிரித்துக்கொண்டு அடுத்த இடம் சென்றாள்! அங்கே ஒருவன் ஒரு கூடை முத்தினிலே உயர்ந்த முத்துக்கொண்டு வந்தேன்! பட்டுப்போன்ற கட்டழகி, கட்டி இதைப் போட்டுக்கோடி என்று பாடினான். அதையும் கண்டு சிரித்துக்கொண்டே அரண்மனை சென்றாள் அந்தக் கிழவி!

அங்கே இரு சிறுமிகள், பாண்டியாடிக்கொண்டிருந்தனர். தங்கப் பலகையிலே முத்துக்கற்கள் போட்டு, பாண்டியாடிக் (பல்லாங்குழி) கொண்டிருந்ததைக் கண்ட இந்தப் பாட்டி இது என்ன குழந்தை முத்துக்கற்களா? என்றாள்.

பாட்டியைக்கண்ட அந்தச் சிறுமிகள், என்ன பாட்டி அப்படிப் பார்க்கிறே! உனக்கு முத்து வேணுமா? என்று அந்தப்பாட்டியின் கையைப் பிடித்து இழுத்துப் போய் முத்துக் களஞ்சியத்தை காட்டினாள் சிறுமி.

அங்கே, முத்துக்களைக் கூடையிலே கொண்டுவருவோரையும் வண்டிகளில் கொண்டுவந்து குவித்துவைத்திருப்பதையும், கண்ட கிழவிக்கு மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமா! அவளையறியாமலே பாட்டு எழும்பியது...

> வேழ முடைத்து மலைநாடு—மேதக்க
> சோழ வளநாடு சோறுடைத்து—
> பூழியர் கோன்
> தென்னாடு முத்துடைத்து......

என்று பாடினாள்!

அருமைத்தோழர்களே! ஔவை கண்ட தமிழகத்தையும், இன்று நாம் காணும் தமிழகத்தையும், மனக்கண்முன்னாலே நிறுத்திப் பாருங்கள்! ஏலம், மிளகு, இஞ்சி விளைகின்ற--மதயானைகள் நிறைந்த மலைக்காடு இல்லையா! கோடையிலும் மாரிக்காலத்திலும் வற்றாது ஓடிவரும் காவிரி வளநாடு இல்லையா! குமரிக்கடல் இல்லையா! துறைமுகமில்லையா! பாண்டிநாடு இல்லையா! என்ன இல்லை! அந்தக் கிழவி இன்றிருந்தால்...

"சோரம்போகுது மலைநாடு! சட்டியில் சோறின்றிக்காயுது சோழவளநாடு, பாட்டாளியின் தென்னாடு, தேய்ந்த ஓடாயிற்று" என்று கண்ணீர் வடித்துப் பாடமாட்டாளா!

அன்று, அரசர் பெருமக்களுக்கு அறிவுரை கூறி நாட்டின் நலம் காத்த ஔவையைக் கண்டநாடு, இன்று, அமைச்சர்பெருமக்களுக்கு அறிவுரை கூற வல்ல அம்மையாரைக் காண முடியாவிட்டாலும், அமைச்சர்களுக்கு ஐயன் பிரசாதம் (திருநீறு)வழங்கும் அம்மையாரைக் காணும் பரிதாபகரமான நிலையையன்றோ காண்கிறோம்!

★

இனிக்கும் செய்தி

வாசக அன்பர்களும், விற்பனையாளர்களும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்

"தம்பிக்கு, அண்ணன்"

எழுதுவது, சித்திரைத் திங்களில் இருந்து தொடங்கப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்
திராவிட நாடு

நான்கு நாட்கள்!

புதன்கிழமை:—

இரவு—உறக்கம், என்ற இரண்டு சொற்களும் நெருங்கி இணைந்துள்ளன, மனித சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கை அட்டவணையிலே.

ஆனால், இரவு உறக்கம் நீக்கி, இயற்கையை மீறி உழைத்தால் தான் பலர் தங்கள் வயிறுகளை ஓரளவாவது உணவில்லாமல் வாடுவதினின்றும் காக்க முடிகின்றது — இது கடவுளைப் படைத்த மனிதனின் சமுதாய அமைப்பு.

அந்த இருட் தொழிலாளர்கள் அந்த இரவிலும் வழக்கம்போல் விழித்துக்கொண்டிருந்தது மட்டுமல்ல, பணியாற்றிக்கொண்டுமிருந்தனர்.

மற்றும் பலர், பணமில்லையே நாளை உணவுக்கு என்று ஏங்கவில்லை, நாளை ஒரு வேளை உணவுக்கும் கதி இல்லையே என்று எண்ணி, ஏங்கி இடுக்கணெய்தி, 'விதி' என்ற இரண்டெழுத்துச் சொல்லைக் கண்டு பிடித்தவனைக் காரமாகக் காறி உமிழ்ந்து, வைது சாபமிட்டுக் கவலையுற்று உறங்காமல் இருந்தனர்.

அவர்களில் ஒருவன் தான் நமது கதைத் தலைவன் "நீடுவாழி"

என்ன அழகான பொருள் பொதிந்த பெயர் என்கிறீர்களா?

"நீடுவாழியின் அம்மா ஒரு முக்காலமுமுணர்ந்த தெய்வப் பெண்ணாக இருக்கவில்லை இருந்திருந்தால், தன் மகனுக்கு "சிரஞ்சீவி" என்ற நெடும்பெயரை வைத்துவிட்டு, நீண்ட பயணத்தினுள் சென்றுவிட்டிருக்க மாட்டாள். அவள் தன் மகனுக்கு "நீடுவாழி" என்றுபெயர் சூட்டவில்லைத்தான். அந்தத் 'தறுதலை'த் தமிழ்ப் பிள்ளைதான் 'சிரஞ்சீவி' என்ற தன் பெயரை, 'நீடுவாழி' என்று மாற்றி வைத்துக்கொண்டு விட்டது.

பெயர் வைத்துக்கொண்டால் போதுமா?

பிறவிக் குருடன்கூடத்தான், கண்ணாயிரம், கண்லட்சம், கண்கோடி என்றெல்லாம் துணிவோடு பெயர் வைத்துக்கொள்கிறார்கள்.

நீடுவாழி நீடு வாழ்ந்து பீடு நடை போடத்தான் நினைத்தான். ஆனால்.........?

எங்கிருந்தோ ஒரு ஆந்தை "ஊ" என்று அலறியது, உரக்க.

இரவின் இடுகாட்டமைதி இருண்டு பட்டது. சுவர்க் கோழிகள் வேறு "நொய்" என்று சத்தமிட்டு ஆந்தையின் இசைக்குப் "பக்கவாத்தியம்" வாசித்தது. ஒத்து ஊதியது யார் என்றால், முச்சந்தியில் கூடிக்கிடந்த 'பைரவ' சுவாமிகள் தான்!

தன் வீட்டுத் தெருத் திண்ணையில் படுத்திருந்த நீடுவாழி எழுந்து குத்துக்கால் இட்டு உட்கார்ந்தான். முழங்கால்களுக்கிடையில் கையைக் கொடுத்துப் பின்னி, அதன்மேல் தலையை வைத்துக்கொண்டு

அழகிரி விசுவநாதன்

சாளரத்தின் வழியாக வீட்டினுள் நோக்கினான். சாளரம் மூடப்பட்டிருந்தது. தலையை மெதுவாக நிமிர்த்தி வானத்தைப் பார்த்தான்.

விண்மீன்கள் கண் சிமிட்டி அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தன.

மூடியிருந்த கதவை எரித்துவிடுவதைப்போல் பார்த்தான். அவனுடைய ஏக்கம், தாபம் சபலம், மூன்றும் சேர்ந்துகூட அந்தத் தட்டிக் கதவை ஒன்றும் செய்துவிட இயலவில்லை.

வயிற்றைக் கிள்ளுவதுபோல் உணர்ந்தான், அவன். சக்தியற்ற தன் கையால் அதைத் தட்டிக் கொடுத்தான்: பொறு, இராசா பொறு! இரண்டு வேளை சோறு போடாவிட்டால், இப்படி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்துவிடுகிறாயே! தியாகிகள் என்று சொல்லிக்கொள்பவர்களெல்லாம் எத்தனை நாட்கள் உண்ணா நோன்பு இருந்திருக்கிறார்கள் தெரியுமா? நாளைக்கு எப்படியாவது உன் கடனைத் தீர்த்துவிடுகிறேன்!

வேலை இல்லாதவனுக்கு வேளா வேளைக்குச் சோறு ஒரு கேடா!

நீடுவாழி மெல்ல முணுமுணுத்தான். பசி கர்ணத்தை அடைத்தது; இரு காதுகளிலும் கைகளை வைத்து மூடிக்கொண்டான்.

எங்கிருந்தோ குழந்தை ஒன்று அழும் ஓசை கேட்டது. அந்த ஒலி வரவர அண்மையில் கேட்பது போல் பட்டது.

உண்மைதான்!

அந்த மழலை மொழி அவன் வீட்டிற்குள்ளிருந்தே வந்தது. யாழையும், குழலையும்விட இனிய மழலையை உதிர்த்ததும் வேறு யாருமில்லை. அவனுடைய வாரிசுதான்!

இரண்டு வயசு சரியாக முடிய இந்தப் பங்குனி வரணும். அதற்குள் என்ன பாடுபடுத்துகிறான், நம்ம பயல்! என்று நினைத்தான், நீடுவாழி. தந்தையின் பெருமை அவன் முகத்தில் பளிச்சிட்டது.

அதற்குள் அவனது மகன் அழையா விருந்தாளியைத் தாய் கொஞ்ச ஆரம்பித்துவிட்டாள்! "அழாதேடா, கண்ணு! எங்கே தூங்கு! கெட்டிக்காரன் இல்லையடா, நீ! அம்மாவுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது, ம்... நீ குடிசை ராஜா அல்லவா? தூங்கு!"

கிணற்றிற்குள்ளிருந்து பேசுவதுபோல் பேசினாள், தாய். அவளுக்கும் பசி போலும்! அவள் வருத்தம் மகனுக்குப் புரிகிறதா? "சரக்கு" இல்லாதார் மேடையில் நின்று கத்துவதுபோல் கத்தினான்.

என்னென்னவோ சொல்லி அவனைத் தேற்ற, அமைதியாக்க முனைந்தாள், நங்கை. அவன் தன் "சத்தியாக்கிரக"த்தை 'சண்டித்தன'மாய்த் தொடர்ந்தான்.

அதற்குள் அவனது தங்கை தேன்மொழி "பசி ராக"த்தைச் 'சுருதி' கூட்டினாள். அது, நான்

ஒரு வயது பெண் இருக்கிறேனே, பாருங்கடியா, அப்பா! என்று கேட்பதுபோல் இருந்தது.

இரண்டு குழந்தைகளின் அலறல்! கேட்கவேண்டுமா? குடிசையில் கோலாகலம்!

"யாரு பொண்ணு, அடிச்சா? அப்பாவா? நான் அவரை அடிச்சுடரேன்! நீ அழாமல் தூங்கம்மா, பசிராணி!" என்று நங்கை மகளை அமைதிப்படுத்தினாள்.

நீடுவாழிக்குச் சிரிப்பும், ஆத்திரமும் கலந்து வந்தது.

தன் மகனையும், மகளையும் 'குடிசை ராஜா' 'பசி ராணி' என்று மனைவி அழைத்தது, சிரிப்பைத் தந்தது. அவள் அப்படிச் சொன்னது சம்பாதித்து மனைவி மக்களுக்குச் சோறு போடக் கதியற்றவன் என்று தன்னைக் கேலி செய்வதாக உணர்ந்து ஆத்திரத்தையும் அடைந்தான்.

வெறுப்போடு சாளரத்தின் வழியே கண்ணை வீட்டிற்குள் ஓட்டினான், இடது மூலை இடுக்கின் வழியே.

மகன் வாணன் கத்திக் கத்தி அயர்ந்துவிட்டான். இயற்கை பெருமிதத்தோடு இலவசமாகத் தந்த உணவான காற்றும், உறக்கமும் அவனை அணைத்துக்கொண்டன.

மகளுக்கு மனைவி பாலமுதூட்டிக்கொண்டிருந்தாள்.

நீடுவாழியின் உடல் சூடேறியது. தலை சுழல்வதுபோல் உணர்ந்தான். கைகளை இறுகப் பிடித்துவிட்டான். அவசரமாக எழுந்து கதவிற்கருகில் சென்றான். ஏறத்தாழ ஓராண்டு காலமாக அவன் அடக்கி வைத்திருந்த உணர்ச்சி வெள்ளம் கடலில் பந்துபோல் பொங்கி எழுந்தது. "பசி" வந்துவிட்டால் பற்றும்பறந்து போகும்" என்று சொல்கிறார்களே, அது எல்லாவகைப் பசிக்கும் பொதுவான சொல்லோ?

கதவை ஓங்கி ஒரு இடி இடித்தான்! "நங்கை" என்று உரக்கக் கூவினான். "கதவைத்திற" கத்தினான், அவன்.

கணவனை மனைவியால் புரிந்துகொள்ள முடியாதா? நங்கை புரிந்துகொண்டாள்.

"உங்களுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?"

"இப்போது எனக்குப் பிடித்திருக்கும் பைத்தியத்திற்கு மருந்து கதவைத் திறந்தால் கிடைக்கும். ஆனால்.........?"

"ஆனால்?"

"நீ கதவைத் திறக்காவிட்டால் எனக்குப் பிடிக்கப்போகும் பைத்தியத்திற்கு மருந்தே இல்லை நங்கை. மருந்தே இல்லை!"

அவன் நிலை பரிதாபத்திற்குரியது!

பேய் என்று ஒன்று இருந்து, அந்த நிலையில் அவனைக் கண்டிருந்தால் உறுதியாய் இரங்கி இருக்கும்.

உள்ளே இருக்கும் அவன் மனைவி பேயோ, இல்லைபெண்ணோ?

அவள் கேட்டேவிட்டாள், "உங்களுக்கு வெட்கமில்லை?"

உள்ளே இள மனைவி தனியே.

வெளியே காளையனக்கணவன்.

இடையே, கதவு, இரவு நேரம்!

மீண்டும் நீடுவாழி மெல்லக் கதவை இடித்தான்.

அதற்குள் தேன்மொழி இருந்ததைத் தின்றுவிட்டுத் தூங்க ஆரம்பித்துவிட்டாள்.

சரேலென்று எழுந்து வந்து நங்கை படேரென்று கதவைத் திறந்தாள்.

நீடுவாழி ஆசையோடு உள்ளே செல்லக் காலைத் தூக்கினான்.

நங்கை கர்ச்சித்தது. "நில்லுங்கள். உள்ளே வரக்கூடாது. ஒரு முறை 'கர்ப்பத்தடை' மாத்திரை என்று எதையோ கொடுத்து என்னை ஏமாற்றினீர்கள் அதற்குத் தண்டனை இந்த வாணன்!... மறுமுறை வேலை கிடைத்துவிட்டது என்று பொய் சொல்லி என்னை ஏமாற்றினீர்கள். அதற்குத் தண்டனை, தேன்மொழி!...... மூன்றும் முறையாக ஏய்க்க முனைந்தீர்கள், தோற்றீர்கள். உங்கள் பாய் திண்ணையை அடைக்கலம் அடைந்தது ... இப்போது பைத்தியம் பிடித்துவிடும் என்கிறீர்கள்!...... நான் ஒருத்தி நாலு வீடுகளில் வேலை செய்து எத்தனை பேரைச் காப்பாற்ற இயலும்?... பிள்ளை பெறுவதைப் 'பேறு' என்று கூறுவார்கள். இப்போது 'தண்டனை' என்று சொல்ல வைத்துவிட்டது, இந்தத் தரித்திரம் பிடித்த நாடு!"

கணவனது கண்களை ஒருமுறை சந்தித்துவிட்டு கதவைப் படரென்று மூடினாள், நீடுவாழியை வெளியேவைத்து.

அப்படியே கைகளால் முகத்தைப் பொத்திக்கொண்டு நங்கை அழுதாள், அழுதாள். அவளது உள்ளம் சொல்லொணாத வேதனையும் பட்டது. தான் எப்படி அவ்வளவு வேகமாக ஆத்திரமாக, கோபமாகப் பேசிவிட்டோம் என்று அவளுக்கே தெரியவில்லை.

ஏனெனில் பேசியது, அவளில்லை அவளைப் பிடித்திருந்த வறுமைப் பேய்.

கட்டிய மனைவியும், கணவனும் கைக்கு எட்டிய தூரத்தில். ஆனால் வாய்க்கு எட்டவில்லை.

நாடா இது?

அடுத்த நாள்.

வியாழக்கிழமை:—

வைகறை வழக்கம்போல் வந்தது. காலைப்போது கணப்போடு தான் மலர்ந்தது. ஆனால், மனிதர்கள்தான் தங்கள் தங்கள் மனத்திற்குத் தக்கபடி இன்ப, துன்பங்களோடு எழுந்தனர்.

நங்கை ஏனோ, அன்று அயர்ந்து சற்று அதிக நேரம் தூங்கிவிட்டாள். இரவு அவள் அனுபவித்த மனவேதனையின் எதிரொலியோ, என்னவோ?

திடுக்கிட்டுக் கண்விழித்தாள், கதிரவன் அவளது கண்களைக் குத்தினான். குழந்தைகள் இரண்டும் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தன.

பறவை இனங்களின் உதய நாதம் நங்கையின் காதுகளில் நன்றாக விழுந்தது.

கட்டியிருந்த கந்தல் உடைகளை அவசர அவசரமாகச் சரிசெய்து கொண்டு அவள் எழுந்தாள். வெயிலைப் பார்த்தாள். மிகுந்த நேரமாகி இருந்தது. நமச்ராம்ஜி வீட்டிற்கு வேலைக்குப் போகவேண்டுமே என்றுநினைத்தாள். 'ஐயயோ வேலைக்கு நாழியாகிவிட்டதே! திட்டுவார்களே, அவர்கள் என்ன திட்டுகிறார்கள் என்றுகூடப் புரியாதே' என்று எண்ணினாள்.

விரைவாகச் சேட்டின் வீட்டிற்கு வேலை செய்யக் கிளம்பினாள். அவள் எண்ணம் இப்படி ஓடியது! "பாவம் 'அவர்' எனக்கு மட்டும் நாடி நரம்பு இல்லையா, என்ன?... அவருக்கு ஒரு வேலை கிடைத்துவிட்டால் எங்களுக்கு நல்லகாலம் தான். கிணற்றுத் தண்ணீரை ஆற்று வெள்ளமா அடித்துக்கொண்டு போய்விடும்!... இது தெரியவில்லையே அவருக்கு?...... பாவம், இரவு அவரிடம் நான் மிகவும் கொடூரமாக நடந்துகொண்டேன்!... அவரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டும்

இன்னும் அவர் திண்ணையில் தான் தூங்கிக்கொண்டிருக்கிறாரோ, இல்லை எழுந்து ஆற்றுக்குச் சென்றிருக்கிறாரோ, குளிக்க!'

கணவனது முகத்தில் விழிக்கவும் தயங்கினாள் அவள்.

கதவைத் திறந்தாள்.

நீடுவாழியைத் திண்ணையில் காணவில்லை. குளிக்கப்போயிருக்கலாம் என்று எண்ணினாள், கதவை மெல்லச் சாத்திவிட்டுப் பக்கத்தில் இருந்த சேட்டின் வீட்டிற்குச் செல்லத் தெருவில் இறங்கினான்.

மேற்போக்காகக் கண்ணைத் திண்ணையில் ஓட்டினாள். கணவன் படுத்திருந்த பாய் விரித்தபடி கிடந்தது. அதன் நடுவில்...... என்ன அது?

கடிதம்!

எழுதியவர் நீடுவாழி! படிப்பவள் நங்கை!

என் இதய இராணிக்கு,

எத்தனையோ மன்னர்களும் மாமன்னர்களும் இருந்திருக்கிறார்கள்; இருக்கிறார்கள். அவர்களுக்கென்று இராணிகளும் பன்மையில் இருந்திருக்கிறார்கள்; இருக்கிறார்கள். அவர்களில், பெரும்பான்மையோருக்குத் தங்கள் மன்னர்களின் இதயத்தில் இடம் கிடைக்கவில்லை, தெரியுமா? வெறும், அரண்மனைக்கும், ஆட்களுக்கும் ஆடம்பரத்துக்கும் மட்டும் இராணியாக இருந்துவிட்டார்கள். இறந்துபட்டார்கள் ஆனால் நீ, நங்கை, என் இதய இராணி!

என்னடா, இரவு நொந்தவன் பகலில் வாழ்த்துகிறானே என்று நினைக்கிறாயா?

இல்லை, இன்றாவது இரவு விருந்து கிடைக்குமா என்ற நப்பாசையால் உன்னை சொல்லால் ஏமாற்றச் சொற் சிலம்பம் ஆடுகிறேன் என்று நினைக்கிறாயா?

இல்லை, நங்கை, இல்லை!

காலைப் போதினிலே கணவனைக் காண ஓடிவரும் உனக்குக் கடிதம் காட்சி தருகிறது, அதற்காக என்னை மன்னித்துவிடு, நங்கை!

நீயும் அனாதை. நானும் அனாதை, உன்னைக் காதலித்துத்தான் மணந்தேன். திருமண நாளன்று நான் வேலை பார்த்து வந்த கப்பல் கம்பெனியின் கப்பல்கள் மூன்று சூயெஸ் கால்வாயில் மூழ்கிவிட்டன. அதோடு நம் கம்பெனியும் நட்டத்தால் மூடப்பட்டது. நம் வாழ்க்கையும் மூழ்கிவிட்டது. சேர்த்துவைத்திருந்த சிறு நிதியைக் கொண்டுதான் உன்னை நான் மணந்தேன். திருமணச் செலவு போகத் தேறியது நாம் தான்!

கூண்டோடு மூழ்கின மூன்று கப்பல்களும் நம் திருமண நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே முழுகியிருக்கக்கூடாதா? திருமணத்தை ஒத்திவைத்திருப்பேனே, வேறு வேலை கிடைத்த பின் வைத்துக் கொள்ளலாமென்று.

வேலையற்ற நான் என்னை இறப்பினின்றும், இரப்பதினின்றும் காப்பாற்றிக்கொள்வதே கடினமாக இருந்தது. உன் இன்னுயிரை வேறு என் கையில் ஒப்படைத்து, என் இதயத்தில் உட்கார்ந்துவிட்டாய்!

நானும் வேலை தேடினேன், கடைத் தெருவில், அலுவலகங்களில். நீயும் வேலை தேடினாய், கடைத் தெரு முதலாளிகள் வீட்டில், அலுவலர்களின் இல்லில்.

வேலை கிடைக்கவில்லை, இருவருக்கும்.

முதல் இரவைத் தள்ளிவைத்தோம், எனக்கு வேலை கிடைத்த பிறகென்று. காரணம், இரண்டு மூன்றாகிவிட்டால் என்ன செய்வது என்று. உன் திருமண உரிமையைப் பறித்ததற்காக என்னை மன்னித்துவிடு. மன்னிப்பு எண் இரண்டு.

நான் உன்னிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டே இருந்தது என் நல்ல நண்பன் ஒருவனின் கண்ணை உறுத்தியிருக்கிறது.

அவன், என்னடா முட்டாள்! கல்யாணமாகி மூன்று மாதங்களாகின்றன... அஞ்சாதேடா. அரசாங்கத்தால் மக்களுக்கு வேலை கொடுக்கத்தான் இயலவில்லையே தவிர, 'கர்ப்பத்தடை' மாத்திரைகளை இலவசமாகத் தருகிறார்கள். போடா, போ! மருத்துவமனைக்குப் போ!...பிறகு மனைவியுடன் 'தேன் நிலவு'...என்றான்.

மாத்திரை வந்தது. முதலிரவும் வந்தது.

கர்ப்பத்தடை மாத்திரை, கர்ப்பவிடையாக மாறி வாணனை வன் கண்ணார் வாழ் வையகத்தில் தள்ளிவிட்டுவிட்டது. மன்னித்துக்கொள், என்னை. மன்னிப்பு எண் மூன்று!

பிறகு உனக்கு வடநாட்டான் ஒருவனின் வீட்டில் வேலைசெய்ய வாய்ப்புக்கிடைத்தது.

நானும் பல இடங்களுக்கு விண்ணப்பங்கள் போட்டேன். பேட்டிகளுக்குப் போயும் வந்தேன். விளைவு? வேலை கிடைக்கவில்லை; வேதனை கிடைத்தது.

உனக்கு என்னால், தொட்டுத் தாலிகட்டிய கணவனால், உணவு, உடை, உறைவிடம் அளிக்க இயலவில்லை. அதற்காக மூன்று மன்னிப்புகளை எனக்குக்கொடு.

எனக்கு வேலை கிடைத்த அன்றுதான் வீட்டினுள் படுக்கை, அதுவரை திண்ணையில்தான் என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாய்; நீ பெண். அடக்கம் மிகுந்தவள். உன் வேதனை உனக்குத் தெரியும் என்கிறாயா? அதுவும் உண்மைதான்!

அன்று வெண்ணிலவு மேலை வானில் பவனி வந்துகொண்டிருந்தது. நான் எங்கோ சுற்றிவிட்டு வந்து சேர்ந்தேன், நம் வீட்டிற்கு.

மனதறிந்து ஒரு பொய் சொன்னேன். எனக்கு அடக்கமில்லை. மிருகமானேன். சுவை கண்ட பூனை சும்மா இருக்குமா?

'வேலை கிடைத்துவிட்டது' என்று பொய் மொழிந்தேன். உன்னை ஏமாற்றினேன்.

மாதம் ஒன்று முடிந்தது. முதல் தேதி வந்தது. சம்பளமா வரும்? வேலையில் இருந்திருந்தால் அல்லவா, சம்பளம்?

பணம் என்னை ஏமாற்றிவிட்டது. தேன்மொழி—நமது இரண்டாவது பெண்வாரிசு நம்மை ஏமாற்றிவிட்டான்! மன்னிப்பு எண் ஏழு!

நான் வேலைக்கு அலைந்து அலைந்து கால்கள்தேய்ந்து, உயரத்தால் நான் ஓரங்குலம் குறைந்துவிட்டேன்!

எம். ஏ, பி. ஏ. என்னும் பட்டப் படிப்புப் பெற்றவர்களே வேலைக்கு அலையும்போது, சாதாரண எஸ். எஸ். எல். சி. படித்த எனக்கு யார் வேலை கொடுக்கப் போகிறார்கள்?

மீண்டும் ஒரு நாள்......

நீயோ ஆணையிட்டாய் "தமிழின் மீது ஆணை! முதலிலே வேலை! மற்றவை மறுநாளே!"

தலை குனிந்தேன்!

'நமக்குத்தான் ஆசைக்கு ஒரு வாணனும், அருமைக்கு ஒரு தேன்மொழியும் இருக்கிறார்களே! நான் நிரந்தரக் கர்ப்பத்தடைசெய்து கொள்கிறேனே' என்று வாதாடினேன்.

பதிவு என். எம். 4642 தொலைபேசி எண். [illegible]

நீ வறுமையில் உழன்றாலும், உன் தாய் மனம், பெண்ணுள்ளம் வாடி வதங்கிவிடுமா?

"நாம் இப்படித்தானா என்றும் இருந்துவிடுவோம்? நல்ல காலம் வரும்! துணிவோடு இருங்கள். வேலை நிச்சயம் கிடைக்கும் பிறகு ...உங்களுக்கு ஏன் இந்த விபரீத புத்தி என்று கடிந்தாய். உனக்குத்தான் எவ்வளவு நம்பிக்கை!

நீ அவ்வளவு சொல்லியும் நான் ஒரு மருத்துவரை அணுகினேன். அவர் முப்பது ரூபாய் கூலி கேட்டார். ஏன் தெரியுமா? அது ஒரு 'இலவச மருத்துவ விடுதி'யாம்! அப்படியென்றால், காசு வாங்கும் மருத்துவவிடுதியில் எவ்வளவு கேட்பார்களோ?

அன்பே, நேற்று இரவு, மீண்டும் உன்னிடம் தவறாக நடந்துகொண்டேன். தமிழின்மீது ஆணை என்று நீ முன்னம் சொன்னதை மறந்து கதவைத் தட்டினேன். நீ என்னைச் சுட்டாய், சொற்களால்... ஆனால் அவைகள் என்னைச் சுடவில்லை. எனக்கு அவை அறிவுரை தந்தன.

நங்கை, நான் மனிதன். தவறுகளால் ஆனவன். இதற்காகவும் என்னை மன்னித்துவிடு. உன்னிடத்தில் நான் கேட்கும் எட்டாவது மன்னிப்பு இது!

ஊம்... இதெல்லாம் பழங்கதை! இனிக்காது. விட்டுத்தள்ளு. நினைத்தால் நெஞ்சம்தான் வேகும்! நமது பஞ்சமா போக்கும்? ஆறின உன் மனப்புண்ணைக் கிறிக்கிண்டுகிறேன் நான், இருக்கட்டும்.

அடுத்து.........

வயிற்றுக்கு உணவில்லாவிட்டாலும் உன் வடிவழகை உண்டு மகிழ்ந்து, உடுத்த உடை இல்லாவிட்டாலும் உன் பனிப்பார்வையை உடுத்தி, உறைய உறைவிடம் இல்லாவிடினும் உன் இதயத்தில் உறைந்து, உன்னோடு வாழ்ந்து வந்தேனானால் ஒன்று, தமிழின் மீது நீ இட்ட ஆணை மீறப்படும். இல்லை, நான் விரகதாபத்தால் வெந்து மடிந்துவிடுவேன்.

ஆகையினால் இப்போது உன்னை நனவில் காண்பதை விடுத்து கனவில் கண்டுகொண்டே செல்கிறேன். எங்கு என்கிறாயா? வேலை இருக்குமிடத்தை நோக்கி.

நான் ஏழைதான்! ஆனால், கோழை அல்ல, நான் சாகமாட்டேன். நாம்பெற்ற செல்வங்களுக்காக, உனக்காக வாழ்வேன். வேலை ஒன்று கிடைத்தவுடன், உங்களைக்கண்டு ஆசை முத்தம் கொடுக்க ஓடோடி வருவேன். ஆனால், இப்போது உங்களைப் பிரிந்து செல்கிறேன். நவயுக 'நளன்' நான்! அந்த நளனை ஊழ்வலி துரத்தியதாம்.

இந்த 'நளனை' (என்னை) சீர் கெட்ட அரசியல் அமைப்பால் விளையும் வேலையின்மை துரத்துகிறது. போய்வருகிறேன், நான். என்னை மன்னித்துவிடு, மன்னிப்பு எண் ஒன்பது.

உழைக்காதவர்கள், உழைக்க மறுக்கிறவர்கள் நம் உயர் தமிழ் நாட்டிலே தரமாக வாழ, நான் உழைக்கிறேன் என்கிறேன், வேலை இல்லையாம், நங்கை வேலை இல்லையாம், இந்தக் குற்றத்துக்கு யார் யாரை மன்னிப்பது?

நம் செல்வங்களுக்கும், உனக்கும் என் தித்திக்கும் முத்தங்கள்!

உன் உயிரில் பாதியான,

பா. நீடுவாழி.

கடிதத்தைப் படித்தவள் சிரித்தா இருப்பாள்?

வெள்ளிக்கிழமை:—

நங்கை பித்துப் பிடித்தவளைப் போல் தலைவிரிகோலமாய் வீட்டுத் திண்ணையில் அசையாது உட்கார்ந்திருந்தாள். வாணனும், தேன்மொழியும் தங்கள் தாயின் அந்த நிலைக்குக் காரணம் என்னவோ என்று, ஒருவருக்கும் விளங்காத மழலை மொழியில் உரையாடிக் கொண்டிருந்தனர்.

"சார், கடிதம்!"

இந்தத் தபால்காரன் இன்ப, துன்பச் சேதிகளை எத்தனை பேருக்கு நாளும் கொடுத்துச்சிரிக்கவும், அழவும் வைத்துவிடுகிறான்! ஆனால், அவன் அவற்றிற்காகச் சிரிப்பதுமில்லை, அழுவதுமில்லை. பிறரைப் பற்றினவரையில் எல்லோரும் ஏகாந்திகள். தங்களைப் பற்றிய வரையில் எல்லாரும் மனிதர்கள்.

நங்கை திடுக்கிட்டு எழுந்து கடிதத்தை வாங்கினாள். தன் கணவனிடமிருந்து இருக்குமோ என்று ஐயுற்றாள்.

கடிதம் கணவனிடமிருந்து வரவில்லை. கணவனுக்கு வந்திருந்தது இந்திய துணைக்கண்டத்தின் அயல்நாட்டுத் துறையினர் வரைந்திருந்தனர். எகிப்துப் பேரரசின் சூயஸ்கால்வாய்க் கம்பெனியில் வேலை கோரித் தாங்கள் அனுப்பியிருந்த விண்ணப்பத்தை முன்னிட்டு, உங்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதாம். குடும்பத்துடன் எகிப்து செல்ல 'பாஸ் போர்ட்' முதலியவற்றிற்கு எங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

வேலையற்றவனுக்கு வேலை கொடுக்காவிட்டாலும், வேற்று நாட்டான் வேலை கொடுக்கிறேன் என்றால், அந்தச் செய்தியை சொந்த நாட்டவனுக்கு அறிவித்து ஆவன செய்கிறார்களே! அவர்கள் வாழ்க!

சனிக்கிழமை:—

பழைய அமைச்சர் ஒருவரின் புதிய காரில் உட்கார்ந்து ஒலி பரப்பினர், கூலிக்குப் பேசுவோர்! அது நிகழ்காலம், இறந்த காலம், வருங்காலம், கஷ்டகாலம் என்பது போல், தேர்தல் காலம்!

அந்தக் காருக்குப் பக்கத்திலே ஒரு பைத்தியம் ஓடிக்கொண்டிருந்தது. இரண்டு கைகளிலும் இரண்டு குழந்தைகள், தோளில் சாத்தியவாறு. பைத்தியம் முன்னே பத்துப்பேர் பின்னே!

பைத்தியம் பேசியது: "ஐயா, ஐயா, அம்மா, அம்மா!...... என் ஊட்டுக்காரரைப் பார்த்தீங்களா?... நல்லா உயரமா, இராசாவாட்டம் இருப்பாரு. முகந்தான் கொஞ்சம் வாட்டமா இருக்கும். வறுமை, வெறுமை!... ஒரு நாள் கேவலமாகப் பேசிட்டேன், ஐயா!... ஆத்திரத்தோடு ஓடிப்போயிட்டாரு!... கண்டால், சொல்கிறீர்களா... அவருக்கு வேலைகிடைச்சிடுச்சி! இதோ கடிதம்! எங்கே தெரியுமா? இங்கே அல்ல, இந்தியாவிலே இல்லே! எகிப்தாம்? என் வீட்டுக்காரர் அடிக்கடி சொல்வாரே!... தென்பாண்டிக் கடல்முத்தைக்கிளியோபாட்ரா தின்றாளாமே!......ம்...... முத்தை தின்னு, அதான் செத்துப் போயிட்டா! தொண்டை அடைச்சிடுச்சாம்... என்ன நான் பைத்தியமா?... உனக்கு, உங்கப்பாவுக்கு, உங்கம்மாவுக்கு, உங்க எல்லாருக்கும். உங்க நாடே பைத்தியக்கார நாடு. நானா சொல்றேன், ஒரு பைத்தியக்காரர் சொல்லலே!...... என்ன! எங்க வீட்டுக்காரரைக் கண்டா நான் நல்லாருக்கேன்னு சொல்லுங்க!" பேசிய பைத்தியம் ஓடவாரம்பித்தது. ★

[illegible] "திராவிடநாடு" அச்சகத்தில் [illegible]